# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

**MITRA TIMES - Tamil & English Monthly**

மலர்: IX இதழ்: 7 | ஜனவரி 2024 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: IX Issue: 7 | January 2024 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20

இருப்பதை
வெளிப்படுத்தும்
வாட்ஸ் அப்
காலை வணக்கம்!



அல்லவை நீங்கிட
நல்லவை தொடரட்டும்!
- ஆசிரியர் கடிதம்

முக அழகை
மேம்படுத்தும் முத்திரை!



உடலை
பாதுகாக்க
தினம் ஒரு
சிறுதானியம்!

மருந்தில்லா
வாழ்க்கை!



## இசைப் பயணத்தில், இளம் வயதில், உலகைசுற்றும் எம்.எஸ்.
## -மானஸா சுப்பிரமணியனின் மார்கழி உலா

# WELCOME 2024



Concept by:
S.SHRUTHI LAKSHMI
B.Sc., (psychology)

Many people, the start of a new year marks an opportunity to reflect on their life, and think about where they would like to be in the future. And while New Year resolutions may get a bad rap for encouraging unrealistic goals or placing pressure on us, they can also be a great starting point to prioritize your health and wellness on your own terms. That may look like embracing totally attainable goals that don't focus so much on an overhaul of your current life, but more so make room for slowly adapting new routines and habits that will make you feel great about yourself

Starting small could look like making an effort to reset your sleep schedule and prioritizing having a bedtime. Or it may start with your home, beginning to organize one room at a time, first focusing on your closet and later getting to your kitchen. Still, it could be as simple as taking control of your thoughts and incorporating inspiring quotes and daily affirmations into your morning routine. In any case, the achievable resolutions below aim to relieve stress, minimize anxiety (not add to it) and improve your overall well-being.

Even if the path to reinventing yourself starts off a little rocky, you can always get back on track at any time throughout the year. So, take the time to scroll through the options below, maybe pick your top five to focus on and remember 2024 is your year, so treat yourself like it!

* Exercise more
* Lose weight
* Get organized
* Learn a new skill or hobby
* Live life to the fullest
* Save more money / *spend less money
* Quit smoking
* Spend more time with family and friends



* Travel more
* Read more

Changing ingrained habits is no easy task, so before diving head-first into your New Year goals, it is important to take a step back and get ready for that impending change. The first breakthrough in change is taking a personal inventory. Being that it's the end of one year and the beginning of the next, it's perfect timing to take stock of the past year's accomplishments. Think about the following: What did I set out to do in the past year? Where did I make progress? Where didn't I see progress? Naturally, your resolution may focus on areas that lack progress, but don't forget to savor the progress made and find some small way to celebrate. Those happy feelings are useful! If possible, try to associate them with an object or word related to your accomplishment.

You will want to keep upbeat with your new resolution, so you can use that positive association with last year's accomplishments to remind you of those good feelings when you are feeling challenged.

As you start thinking about the changes you want to implement, make sure to do the following:

Stay positive Try not to make big/quick changes Change should be gradual Build on smaller changes Allow a little room for error You would be surprised how often people set goals that are not for themselves. These goals could be dictated to or coerced by a manager, spouse, or parental / peer pressure. While it's nice to have some external support, if you don't share the same passion, the resolution has a small chance of succeeding and could even be dead on arrival. To do this, you need to make sure the goal you set is important to you and only you and that there is value or benefit for you in achieving the goal. It is these two things that will provide the reason and willingness to take action. This is also known as motivation!

Thus, it's a safe bet if your resolutions align with the following:

Your goals Your priorities Your dreams Your aspirations Not only should you align around your innermost desires, but you should also make sure the resolutions align with your top priorities. This will lead to a "must do" attitude. If your goals are career-centric, like improving your Excel skills, creating your own professional development plan is a great way to stay motivated on the path toward your goal.



# சோமவார சங்காபிஷேக விழாவில் பங்கேற்ற ஆசிரியர்!

திருவள்ளூர் மாவட்டம் மணவூர் கிராமத்தில் அமைந்துள்ளது அருள்மிகு ஆதி காமாட்சி உடனுறை கற்கடேஸ்வரர் ஆலயம். கடக ராசிக்காரர்களின் பரிகார ஸ்தலம் என்று அழைக்கப்படும் இந்த திருக்கோயிலில் கார்த்திகை மாதம் நான்காம் வாரம் 11.12.2023 அன்று நடைபெற்ற சோமவார சங்காபிஷேக நிகழ்ச்சியில் ஆசிரியர் தமது குடும்பத்தினருடன் பங்கு பெற்றார். உடன் திரு.கண்ணன் காவல்துறை உதவி ஆணையர் (ஓய்வு) அவர்கள்.

ஸ்ரீ சுவாமிநாத சிவம் சிவாச்சாரியார் அவர்களால் ஹோமம், நவகலசாபிஷேகம், 108 சங்காபிஷேகம், தீபாலங்காரம், அபிஷேகம் சிறப்பாக செய்யப்பட்டது. அந்த பகுதியைச் சேர்ந்த சிவனடியார்கள் அனைவரும் வருகை தந்தனர். விழாவின் நிறைவில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது நிகழ்ச்சியை திருப்பணி குழு தலைவர் திரு.ந.சீனிவாசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜெ.வடிவேலு ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.



# ஆசிரியர் பங்கேற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சி!



13.12.2023 புதன்கிழமை மாலை 7 மணிக்கு சென்னை திருவான்மியூர் ஸ்ரீ ராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்ற திரு .என். ராஜேந்திரன் – திருமதி ஜெ. கீதா இணையரின் மகள் திருநிறைச்செல்வின்.ஜெ.அனிதா – திருநிறைச்செல்வன் எம் ராஜேந்திரன் என்கிற குரு திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மித்ரா டைம்ஸ் மாத இதழ் ஆசிரியரும் மித்ரா குழுமங்களின் நிறுவனருமான எம் எஸ் மூர்த்தி அவர்கள் மணமக்களை வாழ்த்தினார். உடன் நீதியரசர் திரு.ராஜேஸ்வர், தொழிலதிபர்கள் ராதா எக்ஸ்போர்ட் ஸ் திரு.கிருஷ்ணன்,kals Distilleries திரு.கே.கலியபெருமாள்(K.P.), திருப்பூர் செந்தில் திரு.சைலேந்தர், திரு.எஸ்.எம்.ஜே முருகன், திரு.மதன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# அல்லவை நீங்கிட நல்லவை தொடரட்டும்!

அன்புடையீர்! வணக்கம்.

2023 ஆம் ஆண்டு விடை பெற்று 2024 ஆம் ஆண்டு வருகை தந்துள்ளது. பழையன கழிதலும் புதிய புகுதலும் இயற்கை. அப்படித்தான் ஒரு ஆங்கில ஆண்டு போய் இன்னொரு ஆங்கில ஆண்டு வந்திருக்கிறது என்று நாம் எடுத்துக் கொண்டாலும் ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டு பிறக்கும்போது இந்த வருடம் முதல் நாம் இப்படி இருக்க வேண்டும் அப்படி இருக்க வேண்டும். இப்படி இருக்கக் கூடாது அப்படி இருக்கக் கூடாது என்றெல்லாம் நமக்குள் ஒரு சுய கட்டுப்பாடு விதித்துக் கொண்டு உறுதி எடுத்துக் கொள்கிறோம். ஆனால் அந்த உறுதியை நாமே காப்பாற்றுகிறோமா என்று சொன்னால் முடியவில்லை. அதற்கான காரணம் நாம் மட்டுமா என்று சொன்னால் இல்லை.

இந்த சமூகமும் ஒரு காரணம் .எனவே நாம் நம் பாதையில் போய்க் கொண்டிருக்கும் போது, சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் நம் வாழ்க்கை நடைமுறைக்கும் நிச்சயம் ஒரு தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் கூட நமக்குள் எடுத்துக் கொண்ட உறுதி மொழியை நாம் கூடுமானவரை செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தையாவது உறுதியாக வைத்துக் கொண்டால், குறைந்தபட்சம் நம்முடைய நிம்மதியையாவது நாம் தக்க வைத்துக் கொள்ளலாம்.

வாழ்க்கை தினம், தினம் புதிய அனுபவத்தைக் கற்றுத் தருகிறது

அதற்கு ஏற்ப நம்மை மாற்றிக் கொள்வோம். மாற்றங்கள் அவசியம் தேவை.

எவ்வளவு பணம் இருந்தாலும் யாரிடமும் வலிகளையோ வேதனைகளையோ துளி அளவு கூட மாற்றி விட முடியாது.




ஏராளமான பணம் சம்பாதிக்க இரவு பகலென ஓடி உழைத்து சம்பாதிப்போம். ஒரு நேரத்தில் பணம் அதிகமாக இன்னும் தேடத் தோணும். தேவைகளுக்கு ஏற்ப பணநெருக்கடி வரும் போது தான் வீணாக செலவழித்ததை எண்ணி இனிமேல் கவனமாக செலவழிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்.

மருத்துவமனையில் இருக்கும் போது தான் ஆரோக்கியத்தை பேணாதது புரியும்.

நமக்கு ஒரு பிரச்சனை ஒரு சங்கடம் ஒரு ஆபத்து என்று வரும்போது அதற்காக நாம் அழும் போது தான் ஆறுதல் சொல்ல ஆட்களை சம்பாதிக்கவில்லை என்பது அறிய வரும். நடமாடும் பருவம் மாறி வயதாகி கட்டிலில் முடங்கும் போது தான் பெரிய வீட்டைக் கட்டி உழைப்பை வீணாக்கியது புரியும்.

உங்கள் புத்தாண்டு உறுதிமொழிகள் தெளிவானதாக இருக்கவேண்டும். தேவையற்றதாகவும், போலி கவுரவம் கொண்டதாகவும் அது இருக்கக்கூடாது. அவசியமற்ற இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு அவஸ்தை பட்டுவிடவும் கூடாது. உயர்ந்த வேலைக்கு போவேன் என்று உறுதி எடுத்துக்கொண்டு, இருக்கிற வேலையையும் இழந்துவிடக்கூடாது. இப்படி அதிரடியான செயல் எதிலாவது ஈடுபட்டால், வாழ்வின் அடுத்தகட்ட வளர்ச்சிகளான திருமணம், குழந்தைப்பேறு, வீடு வாங்குதல் போன்ற எல்லா திட்டங்களிலும் நெருக்கடி ஏற்பட்டுவிடும். பின்பு வருடத்தின் முடிவில் வாழ்க்கையை திரும்பிப் பார்த்து, தனக்கு எதுவுமே சரியாக அமையவில்லை என்று ஏங்க வேண்டியதாகிவிடும். எனவே ஒருவர் சிறந்த லட்சியத்தை இலக்காக கொண்டு செயல்படுவது தவறல்ல, ஆனால் தனது திறனறிந்து செயல்படுவது முக்கியமாகும்.

வாழ்க்கைக்கு எளிமை

தேவை. அதுபோல் உங்கள் புத்தாண்டு உறுதிமொழியிலும் எளிமை தென்படவேண்டும். உங்களுக்கு தேவையான வீடோ, வாகனமோ, விலைஉயர்ந்த பொருட்களோ வாங்கவேண்டும் என்று தீர்மானிக்கும்போது, அது உங்களுக்கு அத்தியாவசியமானதாக இருக்கவேண்டும். அடுத்தவர்களை பார்த்து, அடுத்த வீட்டைப்பார்த்து ஆசைப்பட்டு அதை வாங்க தீர்மானிக்கக்கூடாது. பகட்டாக, படோடபடாபம் காட்டிக் கொள்வதற்காக வரவுக்கு மீறி செலவு செய்வது வாழ்க்கையை இக்கட்டில் கொண்டுபோய்விட்டுவிடும்.

கடற்கரையில் கால்கடுக்க நின்றால் கிளிஞ்சல்கள் மட்டுமே கிடைக்கும். முத்துகள் கிடைப்பதில்லை. மூழ்கினால்தான் முத்தெடுக்க முடியும். இலக்கை நோக்கிய முயற்சிகளில் மூழ்கிப் போனால் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது. திட்டமிட்டுவிட்டு, அந்த இலக்கை அடைய கடுமையாக உழைக்கவேண்டும். உழைப்பில் மூழ்குவதை புத்தாண்டின் சுவாசமாகக் கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்.

உங்களை எப்போதும் தனிநபராக நினைத்துக்கொண்டிருக்காதீர்கள். உங்களுக்கு பின்னால் ஒரு குடும்பமும், சமூகமும் இருக் கிறது என்பதை கருத்தில்கொள்ளுங்கள். உங்கள் லட்சியத்திற்கு பின்னால் தாய், தந்தை, துணைவியர், நட்பு, உறவு, பணியாளர்கள், ஆசிரியர்கள் என்று எவ்வளவோ பேரின் பங்களிப்பு நேரடியாகவும், மறைமுகமாகவும் தேவைப்படும்.

எனவே அவர்களுடன் நட்புறவுடன் தொடர்பில் இருப்பது உங்கள் லட்சிய வெற்றியை எளிதாக்கும். அதுபோல் உங்கள் லட்சியமும், வெற்றியும் உங்களுக்கோ, குடும்பத்திற்கோ மட்டுமல்ல சமூகத்திற்கும் பயன்படவேண்டும். அதற்கு தகுந்தவாறு உங்கள் புத்தாண்டு உறுதிமொழி அமையட்டும்.


உங்கள் அனைவருக்கும் ஆங்கில புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள் என் சார்பிலும் என் குடும்பத்தார் சார்பிலும் என் குழும நிறுவனத்தின் அனைத்து அலுவலர்கள் சார்பிலும் பணியாளர்கள் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

– எம்.எஸ்.மூர்த்தி

# உள்ளே...




மக்கள் மனதில் ஆட்சிசெய்த மாவீரன் கேப்டன்! 9



“இன்று புதிதாய் பிறந்தோம்” 17



மூத்தோர் அனுபவ அறிவியல் 22



ஹெல்மெட்டின் பணி என்ன? 32



நீங்கள் வாங்கி போட்ட இடம் பத்திரமாக இருக்கிறதா? 40



திருக்குறளில் ஓர் இமாலய சாதனை 51




# இசைப் பயணத்தில், இளம் வயதில், உலகைசுற்றும் எம்.எஸ்.

## -மானஸா சுப்பிரமணியனின் மார்கழி உலா



பெரும்பாலும் இளைஞர்கள் இணையதளத்திலும் கைபேசியிலும் எப்போதும் மூழ்கி இருப்பார்கள் என்கிற கெட்ட பெயர் உண்டு. ஆனால் இளம் வயதில் இசையில் ஆர்வம் காட்டிய ஒரு வளரும் பெண் கலைஞரை இளம் வயதில் எம்.எஸ். ஆக உலகம் முழுவதும் சுற்றி தன் இசைப் பயணத்தை நடத்தி வருகிறார்.

“இசை என்பது மனித குலத்தின் உலகளாவிய மொழி.” இது இசை பற்றிய ஹென்றி வாட்ஸ்வொர்த் அவர்களின் கருத்து. இசை என்னும் பறவை தன் சிறகுகள் விரித்து உலகெங்கும் பயணிக்கின்றது. பறக்கின்ற இடமெல்லாம் அவ்விடத்திற்கேற்ப தன்னை அடையாளப்படுத்திக் கொள்கின்றது.

அப்படிப்பட்ட இசைக்கலை நம் பாரத மண்ணின் கலாச்சாரத்தோடு இணைந்து, இயைந்து பல்வேறு பரிமாணங்கள் எடுத்து ஜொலிக்கின்றது. நம் நாட்டின் பாரம்பரிய இசையான கர்நாடக சங்கீதத்தில் கொண்ட ஆர்வம் காரணமாக அதனைக் கற்றுக் கொண்டு பல்வேறு மேடைகளில் பரிமளித்து வரும் ஒரு வளரும் கலைஞரைப் பற்றிய அறிமுகம் இது.



குமாரி மானஸா சுப்ரமணியன், சென்னையில் பிறந்து அமெரிக்காவில் வாழ்ந்து வரும் 16 வயதுப் பெண். பெற்றோர் திரு.சுப்ரமணியன் தியாகராஜன், திருமதி உஷா ராமச்சந்திரன். அன்னை பூமி விடுத்து அயல்நாட்டில் வசித்தாலும் பாரம்பரியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றும் குடும்பத்தைச் சார்ந்த மானஸாவுக்கு சிறு வயது முதலே கர்நாடக சங்கீதத்தின் மீது அளவற்ற ஈடுபாடு. தனது 4 வயது முதல் புகழ்பெற்ற கர்நாடக சங்கீத வித்வான் திரு.சஷிகிரன் அவர்களிடம் இணைவழியே இசை கற்று வருகிறார் மானஸா.

பெற்றோரின் ஊக்குவிப்பு இவரின் ஆர்வத்துக்கு ஊன்றுகோலாய் அமைய தன் இசை கற்கும் பயணத்தை இனிதே தொடர்ந்த மானஸா மிகக் குறுகிய காலத்தில் தனது 15-வது வயதில் தனது வாய்ப்பாட்டு அரங்கேற்றத்தை நிகழ்த்தும் அளவிற்கு முன்னேறினார்.

மூத்த இசை வாத்தியக் கலைஞர்களான வித்வான் எஸ்.வி.ரமணி, வித்வான் B.அனந்தகிருஷ்ணன், வித்வான் குருபிரசாத் மற்றும் வித்வான் மகேஷ் சுப்ரமணியன்

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 09 ஜனவரி 2024 டைம்ஸ்- 7

தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
**கலைமாமணி நடிகர் பூ.விலங்கு மோகன்**

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. **ஆ.தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
9789016153
DR.**ப.குணசீலன்** எம்.பி.ஏ.,
9962531325

நிர்வாக ஆசிரியர்
**ஆர்.குணசேகரன்**

செய்தியாளர்கள்
**பி.வினோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**துடுப்பதி ரகுநாதன்**
**கவிஞர் பண்ருட்டி சுசந்தீனா**
**கோவை.பி.முத்துராஜ்**
**சென்னை எம்.ஜி.ரவீந்திரன்**

இணையதள செய்தியாளர்
**ஆர்.கோபிநாத்**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி** - 044 23743007 /08

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**

**6374285644**
mitratimes2015@gmail.com
www.mitratimes.com







ஆகியோரது பக்கவாக்கியங்கள் மானஸாவிற்குப் பக்கபலமாய் அமைய தொடர்ந்து 2 1/2 மணி நேரம் நடைபெற்ற இவரது அரங்கேற்றம் கிட்டத்தட்ட 350 பார்வையாளர்களோடு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் முக்கிய விருந்தினராகக் கலந்து கொண்ட சாண்ட்லர் நகர மேயர் திரு.கெவின் ஹார்ட்கே இவரது இசை நிகழ்வில் தான் அடைந்த உணர்வை மிக அழகாக வெளிப்படுத்திப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

வித்வான சித்ரா வீணா கணேஷ் அவர்கள் மானஸா இசைத்துறையில் மிக உயர்ந்த இடத்தை அடைவார் என்று பாராட்டினார். தன் இசையால் பார்வையாளர்களை உறைய வைத்தார் மானஸா என்று புகழ்ந்தவர் வித்வான் வி.எஸ்.ரமணி அவர்கள். இன்று அமெரிக்காவில் நடைபெறும் க்ளீவ்வேண்ட் தியாகராஜ ஆராதனை நிகழ்ச்சியில் தொடர்ந்து பங்கேற்று வருகிறார் மானஸா.

அரிசோணா மாகாணத்தின் சாண்ட்லர் நகரில் Great Hearts Chandler Academy பள்ளியில் படித்து வரும் இவர் பள்ளியின் இசைக் குழுவிலும் இடம் பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வருட மார்கழி மஹா உத்சவ நிகழ்ச்சிகளில் கிட்டத்தட்ட 10 கச்சேரிகளை சென்னை மற்றும் டெல்லி உள்ளிட்ட நகரங்களின் சபாக்களில் பாட இருக்கும் மானஸாவை மனமார வாழ்த்துவோம்.

- சுஜாதாமூர்த்தி



# மக்கள் மனதில் ஆட்சிசெய்த மாவீரன் கேப்டன்!

**கே**ப்டன் விஜயகாந்த் மக்கள் மனதில் நடிகராக இடம் பிடித்து பின்னர் அரசியல்வாதியாக அடையாளம் காட்டப்பட்ட திரு.விஜயகாந்த் 1979 இல் நடிக்க வந்து 2015 இல் நடிப்பை நிறுத்திவிட்டார் நடிப்பை நிறுத்தி 8 ஆண்டுகளுக்கு பின்னும்...

2005 ஆம் ஆண்டு தேசிய முற்போக்கு திராவிட கழகம் என்கிற கட்சியை ஆரம்பித்து 2011 இல் எதிர்க்கட்சித் தலைவராக பதவி ஏற்று அரசியலில் முதல்வர் அளவுக்கு ஏற்றம் பெறுவார் என்று எண்ணியிருந்த வேளையில் திடீரென உடல் நல குறைவு ஏற்பட்டு நடப்பு அரசியலில் இருந்து ஐந்தாண்டு காலம் ஒதுங்கி இருந்த போதும்.

கடந்த 28ஆம் தேதி காலை விஜயகாந்த் மறைந்தார் என்ற செய்தி கேட்டு தமிழ்நாட்டில் உள்ள அத்தனை மக்களும் ஒரு நிமிடம் தங்களை மறந்து கண்ணீர் சிந்த ஆரம்பித்தனர். அந்தக் கண்ணீர் வெள்ளமாக மாறி சென்னை முழுவதும் மக்கள் அலையாக மாறியது. மியாட் மருத்துவமனை, சாலிகிராமம் வீடு கோயம்பேடு கட்சி அலுவலகம், தீவுத்திடல், மீண்டும் கோயம்பேடு கட்சி அலுவலகம் கொண்டு வந்து நல்லடக்கம் செய்யும் வரை லட்சக்கணக்கான மக்கள் அவரை பார்த்து கதற அவருடைய மக்கள் ஆளுமையை உணரமுடிந்தது.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை தாலுகா பகுதியில் ராமானுஜபுரம் என்ற ஊரில் விஜயராஜ் என்னும் விஜயகாந்த்25.8.1952 பிறந்தார். அழகர்சாமி ஆண்டாள் இணையரின் மகன் விஜயகாந்த்.

மனைவி பிரேமலதா, மகன்கள் விஜய் பிரபாகரன் சண்முக பாண்டியன்.

விஜயகாந்த் தனது ஆரம்ப கால பள்ளிப் படிப்பை தேவகோட்டையிலுள்ள தி பிரிட்டோ உயர்நிலை பள்ளியிலும், மதுரையில் உள்ள நாடார் உயர்நிலை பள்ளியிலும் பயின்றார். பத்தாம் வகுப்பு வரை படித்த விஜயகாந்த் அதன்பின் தனது தந்தையின் அரிசி ஆலையின் நிர்வாகத்தை கவனிக்க ஆரம்பித்தார்.

படிக்கும் பருவத்திலேயே இவருக்கு சினிமா மீது ஈர்ப்பு இருந்ததால் சினிமாவில் சேர்ந்து நடிக்க வாய்ப்பு தேடி சென்னை வந்த இவர் 1979ல் இயக்குநர் காஜாவின் இயக்கத்தில் வெளிவந்த 'இனிக்கும் இளமை' என்ற திரைப்படத்தில் ஒரு சிறு கதாபாத்திரம் ஏற்று நடித்து தனது திரைப்பயணத்தை துவக்கினார்.

அதன்பின் 1980ல் வெளிவந்த 'தூரத்து இடிமுழக்கம்' என்ற திரைப்படத்தில் முக்கிய வேடமேற்று நடித்து ஒரு நிலையான இடத்தை தமிழ் சினிமாவில் பிடிக்க முற்பட்டார். 1981ல் இயக்குநர் எஸ் ஏ சந்திரசேகர் இயக்கத்தில் இவர் நாயகனாக நடித்து வெளிவந்த ‘சட்டம் ஒரு இருட்டறை' என்ற திரைப்படம் ஒரு மிகப்பெரிய வெற்றி படமாக அமைந்தது. விஜயகாந்தின் திரைப்பயணத்தில் ஒரு மிகப்பெரிய திருப்பத்தையும் தந்தது.

இதன் பிறகு தன்னை ஒரு ஆக்ஷன் ஹீரோவாக காண்பிக்க நினைத்து அதற்கேற்ற கதாபாத்திரங்களை தேர்ந்தெடுத்து நடித்து பல வெற்றிப்படங்களை தந்தார் விஜயகாந்த். தன்னால் குணசித்திர வேடமேற்று நடித்தும் வெற்றி பெற முடியும் என்று நிரூபித்த படம் இயக்குநர் ஆர்

சுந்தர்ராஜன் இயக்கத்தில் 1984 ஆம் ஆண்டு வெளிவந்த 'வைதேகி காத்திருந்தாள்' என்ற திரைப்படமாகும். இத்திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற இதனைத் தொடர்ந்து 'அம்மன் கோயில் கிழக்காலே' 'தழுவாத கைகள்' 'ஊமை விழிகள்' என்று பேர் சொல்லும்படி இவருடைய படப்பட்டியல் நீண்டது.

இவருக்கு சொந்தமாக செங்கல்பட்டு அருகில் பொறியியல் கல்லூரியும், சென்னை கோயம்பேட்டில் திருமண மண்டபமும் உள்ளது. கார்கில் நிவாரண நிதிக்கு ரூ5,00,000 வழங்கிய விஜயகாந்த்,ஒவ்வொரு ஆண்டும் லிட்டில் ப்ளவர் பள்ளிக்கு ரூ25,000 நன்கொடை வழங்குகிறார். நல்ல மதிப்பெண் பெற்ற ஏழை மாணவர்கள் கல்லூரியில் இணைவதற்கு உதவியாக, எந்தவொரு கட்டணமும் இன்றி தனது கல்லூரியில் சேர்த்துக்கொள்கிறார். ஒவ்வொரு ஆண்டும் தனது பிறந்தநாள் அன்று ஏழைகளுக்கு தையல் இயந்திரம், மூன்றுசக்கர வண்டி, இஸ்திரிப்பெட்டி போன்ற உதவிகளை வழங்கிவருகிறார். எம்ஜிஆரின் மனைவியும், தமிழக முன்னாள் முதல்வருமான ஜானகி இராமச்சந்திரன், தேர்தல் பிரச்சாராங்களில் எம்ஜிஆர் பயன்படுத்திவந்த வாகனத்தை விஜயகாந்திற்கு வழங்கியுள்ளார். இவர் நேரடி தெலுங்கு திரைப்படங்களில் நடித்திராதபோதும், இவரது பல படங்கள் மொழிமாற்றம் செய்து வெளியாகியுள்ளது. தமிழக மக்கள் மத்தியில் விஜயகாந்த் பரலவாக கேப்டன் என அறியப்படுகிறார். எம்.ஜி.ஆர் மற்றும் என்.டி.ஆரின் தீவிர ரசிகரான இவரின் பொழுதுபோக்கு கிரிக்கெட், கால்பந்து மற்றும் திரைப்படங்கள் பார்ப்பது ஆகும்.

2001ல் தமிழக அரசின் கலைமாமணி விருது.

1989ல் செந்தூரப்பூவே படத்திற்காக சிறந்த நடிகர் விருது.

1988ல் சிறந்த நடிகருக்கான பிலிம்பேர் விருது.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முன்னாள் தலைவர்.

தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்ற கழகம் என்ற மாநில கட்சியை தமிழகத்தில் துவங்கினார்.

14 ஏப்ரல் 2010ல் கேப்டன் டிவி எனும் 24 மணிநேர தொலைக்காட்சியை துவங்கினார்.

2011ல் ரிஷிவந்தியம் தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராக இரண்டாவது முறையாக தேர்வாகி, தமிழக சட்டசபையின் எதிர்கட்சி தலைவராக பணியாற்றினார். ஆகியவை அவரது பயணத்தில் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

1990 முதல் 1999 வரை, இவர் பல்வேறு திரைப்படங்களில் நடித்த நிலையில், அவற்றில் பெரும்பாலானவை அதிரடி திரைப்படங்களாகும்.



பல்வேறு தோல்விகளுக்கு பிறகு இவர் நடித்த "தூரத்து இடி முழக்கம்" எனும் திரைப்படம் இந்தி, தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னட மொழிகளில் மறுஉருவாக்கம் செய்யப்பட்டது. இந்த படத்திற்கு பிறகு தமிழின் முன்னணி நடிகர்களில் ஒருவரானார். 1984ல் தமிழில் ஒரே ஆண்டில் 18 படங்களை வெளியிட்ட நடிகர் என்ற வரலாற்றை படைத்தார்.வைதேகி காத்திருந்தாள், 'அம்மன் கோயில் கிழக்காலே', 'சத்ரியன்', 'புலன் விசாரணை' போன்ற திரைப்படங்களில் அற்புதமானக் கதாபத்திரங்களை ஏற்று நடித்து, குறுகிய காலத்துக்குள் 90க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து முடித்த அவர், 1991 ஆம் ஆண்டு செல்வமணி இயக்கத்தில் 'கேப்டன் பிரபாகரன்' என்ற திரைபடத்தில் நடித்தார்.

இத்திரைப்படம் அவருக்கு 100வது படமாக மட்டுமல்லாமல், தமிழ் சினிமாவில் மாபெரும் வெற்றியையும் பெற்றது. சினிமா ரசிகர்களின் வரவேற்பைப் பெற்ற படங்களாக அமைந்த இதில், ஒரு காட்டிலாக்கா அதிகாரியாக நடித்து, பேரும் புகழும் பெற்றதால், இவர் மக்களாலும், திரையுலகத்தினராலும் "கேப்டன்" என்று அழைக்கப்பட்டார்

சினிமாவில் தனக்கென ஒரு தனி இடம் பிடித்து நடிகர் சங்கத்தின் தலைவராக ஆகி அந்த சங்கத்தின் கடன்களை எல்லாம் அடைத்து சாதனை படைத்த விஜயகாந்த் அவர்கள் அரசியலில் எதிர்பார்த்த இடத்துக்கு வர இயலவில்லை என்கிற வருத்தம் அவரது ரசிகர்களுக்கும் தொண்டர்களுக்கும் மட்டுமல்ல கலைத்துறைக்கும் பொது மக்களுக்கும் கூட இருந்திருக்கிறது என்பதை அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய கூட்டம் தெளிவுபடுத்தியது

# தேர்தல் நன்கொடை:
# பாஜகவை காங்கிரஸ் வெல்லுமா?

2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் வரவுள்ளது. தேர்தலில் அரசியல் கட்சிகள் செலவு செய்வது என்பது தவிர்க்க முடியாத ஒன்று. அதிலும் சட்டபூர்வமாக தேர்தல் நன்கொடை வசூல் செய்து கொள்ளலாம் என்ற சூழல் அவர்களுக்கு வசதியாக இருக்கிறது.

ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கத்தின் (Association for democratic Reforms) கருத்துப்படி, 202122ஆம் ஆண்டில், நாட்டின் எட்டு பெரிய அரசியல் கட்சிகளில், பாஜக சுமார் 6,046.81 கோடி ரூபாய் சொத்துகளுடன் முன்னணியில் உள்ளது, அதே நேரத்தில் காங்கிரஸின் சொத்து மதிப்பு சுமார் 806 கோடி.

அதாவது, காங்கிரஸைவிட ஏழு மடங்குக்கும் அதிகமான சொத்துகள் பாஜகவுக்கு உள்ளது. இந்தியாவில் தேர்தலில் போட்டியிடுவது மிகவும் விலை உயர்ந்தது என்பது இங்கு தெளிவாகிறது.

மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக 'தேசத்திற்காக நன்கொடை' (Donate for Desh) என்ற பெயரில் இணையம் வாயிலாக கூட்டுநிதி (crowdfunding) திரட்டும் பிரசாரத்தை காங்கிரஸ் தொடங்கியுள்ளது.

இதன்படி, 18 வயதுக்கு மேற்பட்ட இந்தியர்கள் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இணையதளம் மூலம் கட்சிக்கு ரூ.138, 1,380, 13,800 அல்லது அதற்கு மேல் நன்கொடை அளிக்கலாம். இந்த இணையதளத்தைத் தொடங்கி வைத்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே பேசுகையில், “பொதுமக்களிடம் இருந்து உதவி பெற்று நாட்டைக் கட்டியெழுப்ப காங்கிரஸ் கட்சி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது இதுவே முதல் முறை,” என்றார். இந்த பிரசாரத்தின் கீழ் ரூ.6 கோடிக்கு மேல் இதுவரை வசூல் செய்யப்பட்டுள்ளது என அந்த இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது. மேலும், இதுவரை சுமார் இரண்டு லட்சம் பேர் இந்த பிரசாரத்தில் இணைந்துள்ளதாக, காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொருளாளர் அஜய் மக்கான், காங்கிரஸுக்கு வளங்கள் குறைவாக இருப்பதால் இந்தப் பிரசாரம் தொடங்கப்பட்டுள்ளதாக அர்த்தம் இல்லை எனத் தெரிவித்தார். "இது எங்கள் தேர்தல் செலவுகளை ஈடுசெய்யும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இது எங்கள் இலக்குகூட இல்லை. இந்தப் பிரசாரம் ஒரு அரசியல் செயல்பாடு, இதன் மூலம் மக்களை இணைக்க முயல்கிறோம்," என அவர்



தெரிவித்தார். தேசத்திற்காக நன்கொடை' பிரசாரம் தேர்தல் நெருங்கும் நேரத்தில் மேற்கொள்வது குறித்த கேள்விக்குப் பதிலளித்த அஜய் மக்கான், "இது முன்னதாகவே நடந்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். முன்னதாகச் செய்திருந்தால், இன்னும் சிறப்பாக நாங்கள் பொதுமக்களுடன் இணைந்திருப்போம்," என்பதை ஒப்புக்கொள்கிறார்.

தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் 'தேசத்திற்கு நன்கொடை' பிரசாரத்தைத் தொடங்கியுள்ளது குறித்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் முனைவர் ஆராத்யா சேத்தியா கூறுகையில், "இப்போது மிகவும் தாமதமாகிவிட்டது. ‘தேர்தல் பிரசாரத்திற்காக பணம் தேவை, அதற்கு நாம் பணம் வழங்குகிறோம்’ என்ற ரீதியில் மக்கள் இதை எடுத்துக் கொள்வார்கள்" எனத் தெரிவித்தார். ’ஹிந்துஸ்தான் டைம்ஸ்’ செய்தித்தாளின் அரசியல் ஆசிரியர் வினோத் ஷர்மாவின் கூற்றுப்படி, "தாமதம்தான் என்றாலும் இது சிறந்த முயற்சி. தாமதமாகச் செய்ததால் எந்த வித்தியாசமும் ஏற்படுத்தாது,” என்றார்.

அதேநேரம் , காங்கிரஸின் இந்தப் பிரசாரத்தை காந்தி குடும்பத்தை வளப்படுத்தும் மற்றொரு முயற்சி என்று ஆளும் பாஜக வர்ணித்துள்ளது.

பாஜக செய்தித் தொடர்பாளர் ஷேஜாத் பூனாவாலா கூறுகையில், "அறுபது ஆண்டுகளாக நாட்டைக் கொள்ளையடித்து வரும் நிலையில், இன்று, 'தேசத்திற்கு நன்கொடை' என்ற பிரசாரத்தை நடத்தி வருகின்றனர். 'ஜீப் ஊழல்' முதல் 'அகஸ்டா வெஸ்ட்லேண்ட் ஊழல்', 'நேஷனல் ஹெரால்டு ஊழல்' என அறுபது ஆண்டுகள் ஊழல்கள் செய்து வருகின்றன.

அதுவரை நாட்டின் ஒவ்வொரு பைசாவையும் கொள்ளையடித்து, லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் கொள்ளையடித்து, நாட்டையே கொள்ளையடித்து, இன்று ‘தேசத்திற்காக நன்கொடை’ என்ற பிரசாரத்தை நடத்துகிறார்கள்,” என்றார்.

# வாழ்க்கை தத்துவத்தின் உண்மை!



உன்னை வாழ்த்த மனம் இல்லாதவர்கள் இருப்பார்கள். அவர்களைப் பற்றி கவலைப்படாதே.....

நீ எதை செய்தாலும் அதில் ஒரு குறையை கண்டுபிடிக்கக்கூடிய மனிதர்களும் இருந்து கொண்டுதான் இருப்பார்கள்.

அதையும் பெரிது பண்ணாதே.

உன் லட்சியம் எதுவோ அதை நோக்கி பயணம் போ.

ஒன்றை மட்டும் தெரிந்து கொள். ஒவ்வொரு மனிதனும் தனித்தனி ஜென்மங்கள். தனித்தனி பிறவிகள் தனித்தனி ஆன்மாக்கள்.

அவர்களுக்கென்று தனித்தனி ஆசாபாசங்கள் இருக்கும். குணங்களும் இருக்கும். அதன் வழியில் தான் அவர்களின் பயணமும் இருக்கும். அவர்களை ஒழுங்கு படுத்துகிறேன் என்று வேதனைகளை சுமந்து கொள்ளாதே. அவர்கள் போகும் வரை போகட்டும். போய் ஒரு அனுபவத்தை பெற்றபின் திரும்பி வருவார்கள்.

அதுவரை நீ பொறுமையாக இருக்க வேண்டும். அவர்கள் போன பாதை நல்லதா? கெட்டதா? என்பதை அவர்களாக உணர்ந்தால்தான் அவர்களுக்கு ஒரு உண்மை தெரியும். அந்த உண்மையை நீ முன்கூட்டியே சொன்னால் உன்னை அவர்களுக்கு பிடிக்காது.

இதுதான் வாழ்க்கையின் தத்துவ உண்மை.

அவர்களது பூர்வ புண்ணியத்தின் அடிப்படையில்தான் அவர்களின் குணங்களும் செயல்களும் இருக்கும்....

அது,உடன்பிறந்தவர்களாகஇருந்தாலும், நண்பர்களாக இருந்தாலும், கணவன், மனைவியாக இருந்தாலும், பெற்ற குழந்தைகளாக இருந்தாலும், பேரன் பேத்திகளாக இருந்தாலும், எந்த உறவுகளாக இருந்தாலும், அவர்களது பிறவி குணம் ஒரு போதும் மாறாது.

எதைச் செய்ய வந்தார்களோ அதை செய்வதுதானே அவர்களின் விதி. இதை நீ மாற்றி அமைக்க முடியுமா...?

ஒதுங்கி நின்று வேடிக்கை பார்.

பந்த பாசத்தில் உள்ளே விழுந்து அறிவுரை சொல்லுகிறேன் என்று கெட்ட பெயரை சம்பாதித்துக் கொண்டிருக்காதே.

அவர்களுக்கு அனுபவம் தான் குரு.

அந்த அனுபவம் ஏற்பட்ட பிறகு தன்னை மாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு விதி இருந்தால் தன்னை மாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு விதி இருந்தால் தன்னை திருத்திக் கொள்வார்கள். அதுவரை நீ பொறுமையாக இரு.

செயற்கையாகஒருகுணத்தை உருவாக்கி உன்னிடம் அன்பை காட்டினாலும்,

தான் யார்? தன் குணம் என்ன?

என்பதை ஒரு நாள் வெளிப்படுத்தி



விடுவார்கள். எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தோடு இருந்து கொள்ள பழகிக் கொள்.

நாம் வந்து போகும் உலகத்தில் பிறந்திருக்கிறோம். அவரவர்களுக்கு என்ன வேஷம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். அதைத் தவிர நாம் வேறு எதையும் செய்து காட்ட முடியாது.....

எல்லையில்லாத அன்பை வைத்திருந்தேன் என்னை ஏமாற்றி விட்டார்கள் என்று புலம்பிக் கொண்டு இருக்காதே. கடலுக்கும் ஒரு எல்லை வைத்திருக்கிறான் கடவுள்.

அதையும் மீறி சிலவேளைகளில் இறைவன் வகுத்த எல்லையை கடல் தாண்டி விடுகிறது. அது போல் இயற்கையின் சுபாவங்களைப் போல் மனித இயற்கை சுபாவங்கள் சில நேரங்களில் தங்களை வெளிப்படுத்தி விடும்.

நீ உன்னை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாயோ அப்படி வைத்துக் கொண்டு வாழப்பழகிக் கொள். அதில் நன்மை வந்தாலும், தீமை வந்தாலும், உனக்கும் ஒரு அனுபவம் கிடைக்கும். அதை வைத்து உன்னையும் திருத்திக் கொள்ளலாம்.

இன்பமானாலும் துன்பமானாலும் அதை நீயே சந்திக்க கற்றுக்கொள். அதை பகிர்ந்து கொள்வதற்கு ஒரு துணையைத் தேடாதே.

உன் இன்பதுன்பத்தில் பங்குபெறுவதற்கு இந்த பிரபஞ்சத்தில் ஒருவர் பிறந்திருந்தால் நிச்சயம் அவர் உன்னை கைவிடாமல் உன்னோடு சேர்ந்தே பயணிப்பார். அது உன் பிறவி பிராப்தத்தை பொறுத்து இருக்கிறது. அப்படி அது நடந்து விட்டால், எந்த சூழ்நிலையிலும் உன்னோடு இணைந்தே இருப்பார்.... நீ பெண்ணாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், வரும் துன்பத்தை எதிர் கொள்ளக்கூடிய ஆற்றலை உருவாக்கிக் கொள். மனிதன் மீது வைக்கும் நம்பிக்கையை விட இறைவன் மீது வைக்கும் நம்பிக்கையை அதிகரித்துக் கொள்.....

உன் கண்ணீரும். உன் கவலையும் உன்னை பலவீனமாக காட்டிவிடும்... அழுவதாலும் சோர்ந்து போவதாலும் ஒன்றும் நடக்கப் போவதில்லை. எப்படி இருந்தாலும் நீதான் அந்த சுமையை சுமந்து ஆகவேண்டும்.

"அழுது சுமப்பதை காட்டிலும், ஏற்று சுமப்பது உனக்கு சிரமம் இல்லாமல் இருக்கும்."

தைரியமும் தன்னம்பிக்கையும் தான் ஒரு மனிதனை உலகத்தில் வாழ வைக்கும் என்ற உண்மையை உணர்ந்துகொள். இந்த பக்குவத்தை அடைந்து விட்டால் எத்துன்பமும் உன்னை நெருங்காது என்பதை உணர்ந்துகொள்....இந்த தத்துவத்தை உணர்ந்து கொண்டால் வாழ்க்கையில் எந்த நாளும் நமக்கு எதையும் ஏற்கும் எதையும் தாங்கும் மனம் இருக்கும்.

**- தீ.கவின், பண்ருட்டி**

# முக அழகை மேம்படுத்தும் முத்திரை!

உடல் ஆரோக்கியத்தின் வெளிப் பாட்டை முகத்தில் காணலாம். முக அழகை மேம்படுத்தக்கூடிய முத்திரைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

உடல் ஆரோக்கியத்தின் வெளிப்பாட்டை முகத்தில் காணலாம். முக அழகை மேம்படுத்தக்கூடிய முத்திரைகள் சிலவற்றைப் பார்ப்போம். நீர் முத்திரை சுண்டு விரல், கட்டை விரலின் நுனிகள் தொட்டுக்கொண்டு இருக்க வேண்டும். மற்ற விரல்கள் நீட்டி இருக்கட்டும். இரு கைகளிலும் இந்த முத்திரையைப் பிடிப்பது அவசியம். இந்த முத்திரையை 10 நிமிடங்கள் வரை செய்யலாம் பலன்கள்: கருவளையத்தைப் போக்கும். தொடர்ந்து இந்த முத்திரையைச் செய்துவர, இரண்டு வாரங்களிலேயே மாற்றம் தெரியும். முகப்பரு மறையும். முகத்தில் பளபளப்பு அதிகரிக்க, இதைச் செய்யலாம். முகத்தில் உள்ள மாசு, மருக்கள் மறையும். சருமம் மற்றும் கூந்தல் வறட்சி சரியாகும். சருமம் தொடர்பான அனைத்துப் பிரச்னைகளும் தீரும். வயோதிகத்தால் வரும் தோல் சுருக்கங்கள் தாமதமாகும்.



பங்கஜ முத்திரை சப்பளங்கால் இட்டு, நிமிர்ந்த நிலையில் உட்கார்ந்து, நெஞ்சுப் பகுதியில், கைவிரல்களை உடலில் ஒட்டாமல் வைக்க வேண்டும். இரண்டு கைகளின் கட்டைவிரலும், சுண்டு விரலும் முழுமையாக ஒட்டியிருக்க வேண்டும். மற்ற விரல்களை எவ்வளவு முடியுமோ, அவ்வளவு மலர்ச்சியாக விரித்துவைக்க வேண்டும். 20 நிமிடங்கள் வரை செய்யலாம்.

மனமகிழ்ச்சியையும் மலர்ச்சியையும் உண்டாக்கி, முகமலர்ச்சியை உண்டாக்குகிறது. முகம் பொலிவடைகிறது.

**- சிவகங்கை தனலட்சுமி**

# கோவையை நோக்கி வரும் பெரும் தொழில் நிறுவனங்கள்!

இந்தியாவில் பெங்களூர், புவனேஷ்வர், சென்னை, ஹைதராபாத், கொல்கத்தா, மும்பை, டெல்லி, நொய்டா, குர்கிராம் ஆகிய நகரங்களைத் தொடர்ந்து தற்போது கோயம்புத்தூரில் துவங்கியுள்ளது. Protiviti போன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் கோயம்புத்தூரில் தனது அலுவலகத்தைத் துவங்க முக்கியமான காரணம், இந்த மாவட்டத்தில் அதிகப்படியான திறன் வாய்ந்த ஊழியர்களும், பட்டதாரிகளும் அதிகமாக இருப்பது தான். ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஏற்ற ஊழியர்கள் இல்லாத இடத்தில் யாராக இருந்தாலும் அலுவலகத்தைத் துவங்க மாட்டார்கள். கோயம்புத்தூர் புதிய நிறுவனங்கள், முதலீடுகளை அதிகளவில் ஈர்க்க முக்கியமான காரணம் இப்பகுதியில் இருக்கும் திறன் வாய்ந்த ஊழியர்கள் மட்டுமே. இன்றைய வர்த்தக முறையில் அனைத்தும் டெக்னாலஜி வாயிலாகச் சாத்தியம் என்பதால் திறன் வாய்ந்த ஊழியர்கள் எங்குக் கிடைத்தாலும் சரி நிறுவனங்கள் படையெடுக்கத் தயாராக உள்ளது. கோயம்புத்தூர் இருக்கும் பேஸ்மென்ட் இதுதான், ஐடி, உற்பத்தி, கட்டுமானம், ஆராய்ச்சி உட்பட அனைத்து துறைக்கும் தேவை திறன் வாய்ந்த ஊழியர்கள் உள்ளனர். மேலும் கோயம்புத்தூரில் தற்போது ரியல் எஸ்டேட் விலை உயர் முக்கியக் காரணமும் இந்த வளர்ச்சி தான், அடுத்த 10 வருடத்திற்கு இந்த வளர்ச்சி கட்டாயம் இருக்கும்.

இந்தியாவில் பெரு நகர்களான சென்னை, மும்பை, பெங்களூர் ஆகியவை மூச்சு முட்டும் அளவுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு இருக்கும் வேளையில், இனி அடுத்தகட்ட விரிவாக்கத்திற்கு 2ஆம் மற்றும் 3ஆம் தர நகரங்களை நோக்கி அரசும், நிறுவனங்களும் படையெடுக்கத் துவங்கியுள்ளது. உதாரணமாக மகாராஷ்டிரா மாநில அரச சமீபத்தில் நவி மும்பைக்கு அடுத்தபடியாக சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் 3வது மும்பை நகரத்தை அமைக்கும் பணியில் இறங்கியுள்ளது. அப்படித் தமிழ்நாட்டில் சென்னை தாண்டி தற்போது கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, மதுரை, திருச்சி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் புதிய வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஈர்க்கும் காந்தமாக மாறி வருகிறது. இதில் முக்கியமாகக் கோயம்புத்தூர் MSME, உற்பத்தித் துறையின் ஆதிக்கம் கலைந்து ஐடி நகரமாக மாறி வருகிறது. அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் Protiviti என்ற கன்சல்டிங் நிறுவனம் தற்போது கோயம்புத்தூரில் புதிய அலுவலகத்தை முக்கியமான டெக் பார்க்கில் திறந்துள்ளது. வெளிநாட்டு நிறுவனங்கள் அடுத்தடுத்து









கோயம்புத்தூர் வர முக்கியமான காரணம் பேஸ்மென்ட். Sukanya Samriddhi Scheme Protiviti நிறுவனம் கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகத்தில் சுமார் 10 ஏக்கர் நிலத்தில் அமைந்திருக்கும் TICEL பயோ டெக்னாலஜி பார்க்கில் அமைந்துள்ளது. சுமார் 13 மாடியில் அமைந்துள்ளது இந்த TICEL டெக் பார்க்கில் புதுவரவாக அமெரிக்காவின் Protiviti நிறுவனம் வந்துள்ளது. TICEL பயோ பார்க் Phase 1,2 சென்னையில் அமைந்திருக்கும் வேலையில், Phase 3 கோயம்புத்தூரில் அமைந்துள்ளது. TICEL என்பது பயோடெக்னாலஜி, பார்மா, ஐடி/ஐடீஸ், பியோஐடி, நேனோ டெக்னாலஜி, கமர்ஷியல் மற்றும் அலுவலகக் கட்டமைப்பை உருவாக்க தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கும் TIDCO மற்றும் TIDEL Park இணைந்து உருவாக்கிய ஒரு அமைப்பாகும். Protiviti நிறுவனம் பிரபல ஹெச்ஆர் பிரிவு நிறுவனமான ராபெர்ட் ஹால்ப்ன் கிளை நிறுவனமாகும். Protiviti தற்போது இன்டர்நல் ஆடிட், ரிஸ்க் அண்ட் கம்பிளையன்ஸ், டெக்னாலதி, பிஸ்னஸ் பிராசஸ், டேட்டா அனலிட்டிக்ஸ், பைனான்ஸ் ஆகிய பிரிவில் கன்சல்டிங் சேவையை அளிக்கிறது. Protiviti நிறுவனம் சுமார் 27 நாடுகளில், 85 இடங்களில் அலுவலகத்தை வைத்துள்ளது.

**- பி.முத்துராஜ்**

## தீயணைப்புத் துறையில் இருந்து முதல் பெண் ஐ.ஏ.எஸ்.!

**அ**ரசு அதிகாரிகளாக பணிபுரிபவர்கள், மாநில அரசு அல்லாத சிவில் சர்வீசஸ் பதவிக்கு நியமனம் பெற எழுத்துத் தேர்வில் பங்கற்பார்கள். அதன்படி மாநில அரசு தனது விருப்ப அதிகாரங்களைப் பயன்படுத்தி, நேர்காணலை நடத்தி, எஸ்சிஎஸ் அல்லாத ஒதுக்கீட்டிலிருந்து காலியாக உள்ள ஐஏஎஸ் பதவியை நிரப்ப மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு (யுபிஎஸ்சி) பெயர்களை பரிந்துரைக்கு அனுப்பும்"

யுபிஎஸ்சி தேர்வாணையம் அவர்களுக்கு நேர்காணல் நடத்தி ஐ.ஏ.எஸ் அதிகாரிகளாக தேர்வு செய்யும். இப்படி ஐஏஎஸ் அதிகாரிகளாக நியமனம் பெறுபவர்கள் மீது அவர்கள் பணிக்காலத்தில் எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கை ஹிஸ்டரியும் இருக்கக்கூடாது. மேலும், பணிக்காலத்தில் சிறப்பான முறையில் பணியாற்றி இருக்க வேண்டும்."

இந்நிலையில், தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் இணை இயக்குநராகப் பணியாற்றும் என். பிரியா, மாநில அரசு அல்லாத சிவில் சர்வீசஸ் (Non state



Civil service) ஒதுக்கீட்டிலிருந்து ஐஏஎஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான அறிவிப்பை மத்திய பணியாளர்கள், பொதுமக்கள் குறைகள் மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் வெளியிட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரி பிரியாவுக்கு 2022 தமிழ்நாடு கேடர் ஒதுக்கப்பட்டுள்ளது.

**- கவிஞர் சுகந்தீனா**



# “இன்று புதிதாய் பிறந்தோம்”

ஒரு சிறகை வைத்துப் பறவையால் பறக்க முடியுமா? எப்படிப் பறவை பறக்க இரண்டு சிறகுகள் தேவையோ அது போல ஒரு சமூகம் முன்னேற வேண்டுமானால் ஆண் பெண் இருவருமே முன்னேற வேண்டும்.

பாரதி, நிவிதிதா அம்மையாரைச் சந்தித்த சம்பவம் நமக்குத் தெரியும். “உங்கள் மனைவியை அழைத்து வரவில்லையா?” என்று அம்மா கேட்க, “அவளுக்கு அரசியல் விவகாரங்கள் எதுவும் தெரியாது. அதனால் நான் அவளை வெளியே எங்கும் அழைத்துச் செல்வதில்லை” என்றார். “உங்கள் மனைவிக்கே சம உரிமை தராத நீங்கள் நாட்டுக்கு எப்படி விடுதலை வாங்கித் தரப் போகிறீர்கள்?” என்று அம்மா கேட்டார்கள். அன்று பாரதி புதிதாய் பிறந்தார். அன்று முதல் பெண் விடுதலைக்காவும் போராடத் துணிந்தார்.

பெண் வழிச் சமூகம் நாம். சங்க காலத்தில் பெண்பாற் புலவர்களும் அறுவை சிகிச்சையே செய்த மருத்துவச்சிகளும் கூட நம்மிடம் இருந்தார்கள். நடுவில் வந்த குழப்பத்தால்,

*“ஆடை அணிகலன், ஆசைக்கு வாச மலர்*

*தேடுவதும், ஆடவர்க்குச் சேவித்து இருப்பதுவும்,*

*அஞ்சுவதும், நாணுவதும், ஆமையைப் போல் வாழுவதும்*

*கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்*

*மானுடர் கூட்டத்தில் வலிவற்ற ஒரு பகுதி”*

என்று பாரதிதாசன் சொன்னதுபோல் நாம் அடிமையாக்கப்பட்டோம். “சென்றதினி மீளாது மூடரே” என்று இடித்துரைத்து பாரதி நம்மை போராட வைத்தார். இந்த அடிமைத்தனத்தில் இருந்து மீண்டு வரத்தான் எத்தனை போராட்டங்கள்! இதில் சாதியும் சேர்ந்துகொண்டு இடியாப்பச் சிக்கலாக்கியது.

மஹாராஷ்டிராவில் ஜோதிராவ் பூலே, சாவித்ரி பாய் பூலே என்று கணவன் மனைவி. சாவித்ரி பாய் பூலே, தாழ்த்தப்பட்டவர் என்று சொல்லப்பட்ட பெண்களுக்கு பாடம் சொல்லி தந்தார். இது பிடிக்காத சிலர், பெண்களுக்குக் கல்வியா? அதுவும் அந்தச் சாதிக்கா? என்று அவர் மேல் சாணத்தையும், குப்பையையும் வீசி எறிந்தனர். பள்ளிக்குப் போய் மீண்டுமொரு முறை குளித்து வேறு புடவை மாற்றிக் கொண்டு பாடம் சொன்ன அந்த சாவித்திரி, நங்கையரில் திலகம். ‘நீர் சென்றதையே சிந்தை செய்து கவலை எனும் குழியில் வீழ்ந்து குமையாதீர்’ என்று பாரதி சொன்னதைப் போல், அந்த அம்மா எல்லா அவமானங்களையும் பொறுத்துக்கொண்டு தினம் தினம் புதிதாய்ப் பிறந்ததால் அன்று பெண்களுக்கு கல்வி மலர்ந்தது.

அதன் பிறகு 50 ஆண்டுகள் கழிந்தும் கூட, மருத்துவர் முத்துலட்சுமியால் மருத்துவம் படிக்கக் கல்லூரிக்குள் நுழைய முடியவில்லை. ஆண்கள் கல்லூரியில் பெண்ணுக்கு இடமில்லை என்றார்கள் . பெண்களுக்குக் கல்லூரியே இல்லை. போராடிக் கல்லூரியில் நுழைந்தார். வகுப்பறையில் திரை போட்டுப் பாடம் நடந்தது. ஆண்கள் ஒரு புறம். இவர் ஒரு புறம். ஆண்கள் கல்லூரியில் ஒரு பெண் படித்தால், ஆண்களின் கவனம் சிதறிவிடுமாம். ஆகவே தான் திரை. ஆனாலும் ஒரு பையனும் ஒழுங்காகப் படிக்கவில்லை போல. முத்துலட்சுமி தான் முதல் மதிப்பெண் பெற்றார். இருதாரத் தடைச் சட்டம், தேவதாசி ஒழிப்புச் சட்டம், பெண்ணுக்குச் சொத்துரிமை, பால்ய விவாகத் தடைச்சட்டம் எனப் பெண்களுக்காக



அவர் கொண்டு வந்த சட்டங்கள் தான் எத்தனை? எத்தனை? "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிலே பெண்கள் நடத்த வந்தோம்" என்று பாரதி சொன்னதின் முழு எடுத்துக்காட்டு முத்துலட்சுமி.

இப்படி எத்தனையோ புதுமைப் பெண்கள் புதிது புதிதாய்ப் பிறந்து வந்து, கல்லிலும் முள்ளிலும் நடந்து, நமக்குச் சிவப்புக் கம்பளம் விரித்து வைத்தனர். 'அன்னை பெரியார்' போட்ட பிச்சையில் இன்று நானும் உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கிறேன். இன்று நாம் அனைவரும் படித்துவிட்டோம், வேலைக்குச் செல்கிறோம். ஆனால் இன்றும் கூட வேலையிடங்களில் ஒரு ஆண் திறமையானவன் என்று சொன்னாலே நம்பிவிடுவார்கள். ஆனால் ஒரு பெண் திறமையானவள் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். உயர் பதவிகளில் இன்னமும் நமக்குச் சம உரிமையில்லை. அமெரிக்காவிலும் அதே நிலை தான். அதனால் தான் கிட்டத்தட்ட 300 ஆண்டுகளுக்கு முன் விடுதலை அடைந்த இந்த நாட்டில் இப்போது தான் முதல்த் துணை அதிபரே வந்திருக்கிறார். அமெரிக்கா விடுதலை அடைந்த நான்காவது ஆண்டில் நம் நாட்டில் வீர மங்கை வேலு நாச்சியார் அரசியாகவே ஆகிவிட்டார். சரி, அது இருக்கட்டும்.

இன்றும் கூட முன்னேறிய பெண்களைப் பார்த்து இவள் ஒழுக்கங்கெட்டவள் என்று வாய் கூசாமல் சொல்வதும், அரக்கர் சிலர் பெண்களை, குழந்தைகளைக் கூட வன்கொடுமை செய்வதும் நடக்கிறதே. "கத்தியை நீட்டியபடி கையைத் தொடாதேயடா" என்று பாரதிதாசன் காட்டிய வீரம் நமக்கு வேண்டும் தோழியரே! நாம் புதிதாய்ப் பிறக்க வேண்டும்.

இப்படி நாம் சிறுகச் சிறுக முன்னேறிக் கொண்டிருக்கும் போது, நம்மில் சிலர் என்ன செய்கிறார்கள் தெரியுமா? நான் ஆணோடு சரிக்குச் சரி போட்டி போடுகிறேன் என்று, 'நீ மட்டும் தான் தண்ணியடிப்பாயா? நானும் அடிப்பேன்' என்கிறார்கள். 'நான் எப்படி வேண்டுமானாலும் உடை உடுத்துவேன், நீ பார்க்காதே!' என்கிறார்கள். நமக்குத் தெரியுமா? ஒரு பெண் தன் மார்பகங்களை அறுத்தெறிந்து நம் தோளுக்குச் சீலை வாங்கித் தந்தார். நாம் மறந்துவிடக்கூடாது.

ஆண் தான் நம்முடைய முதல் இலக்கு. நான் மறுக்கவில்லை. ஆண் தான் நம் கண்ணெதிரில் வாய்ப்பு வசதிகளைப் பெற்று முன்னேறியிருக்கிறான். அவனைப் போலவே நானும் முன்னேற வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை. எங்கே தொல்லை வருகிறது தெரியுமா? ஆணை அடைந்துவிட்ட பிறகு என்ன செய்வதென்று தெரியாமல், அவன் செய்த தவறுகளையே செய்து கீழே இறங்கிக் கொண்டிருக்கிறோம், இல்லையானால் அங்கேயே நின்று கொண்டிருக்கிறோம். அவனை அடைந்துவிட்ட பிறகு, அவனைத் தாண்டிப் போய் நமக்கான இடத்தை நாம் பிடிக்கவேண்டும். ஆண் நம்முடைய முதல் இலக்கே யன்றி இறுதி இலக்கல்ல.

கோவலன் ஒழுக்கங்கெட்டுப் போனான். அதற்காகக் கண்ணகியும் ஒழுக்கங் கெட்டுப் போனாளா? 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' எனக் கேட்டுக் கோவலனைக் கண்ணோடு கண் பார்க்க முடியாமல் கூனிக் குறுக வைத்தாள். தன்னுடைய வீரத்தாலும் பண்பாலும் வரலாற்றில் தனக்கென ஒரிடத்தைப் பிடித்தாள்.

எண்ணமதைத் திண்ணமுற இசைத்து மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்!

நமக்கான அரியணையை நாமே அமைப்போம்!!

– ஜெயா மாறன்

# கடலை (சிறுகதை)

## - த.ரெ.தமிழ்மணி

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது... அது அவரே தான்!

இரண்டு மாதங்களுக்கு முந்தைய மழை நாள் அது.

அரசியல் கட்சி நடத்தும் பொதுக் கூட்டங்களுக்கு மாநாடுகளுக்கு கட்சி கொடி கட்டுகிற வேலை என்னுடையது. அதற்கு முன் அவரைப் பார்த்ததில்லை. மன்னார்குடியில் நடந்த கட்சிக் கூட்டம் ஒன்றில் தான் பார்க்க நேர்ந்தது. விளம்பரம் என்றால் அப்படியொரு விளம்பரம் ஒரு மாநாட்டிற்குச் செய்ய வேண்டிய செலவைப் பொதுக் கூட்டத்திற்கே செய்திருந்தார்கள். நாற்காலிகள் யாராவது வந்து உட்காருவார்களா என்று ஆயிரக் கணக்கில் காத்துக் கிடந்தன. வானம் தும்முவதும் இருமுவதுமாக இருந்து கொண்டிருந்ததால் கூட்டம் சேரவில்லை. குடைகளை நம்பி வந்தவர்கள் மட்டுமே நாற்காலிக்கு பாரமாக அமர்ந்திருந்தார்கள். அப்போது தான் ஓர் ஓரமாய் உட்கார்ந்திருந்த என்னிடம், “தம்பி, கடலை சாப்புடுறிங்களா கடல்” என்று ஒரு குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். ஒரு முதியவர் கையில் தட்டுக் கூடையுடன் நின்றிருந்தார். கூடையின் ஓரமாக பூவின் இதழ்கள் போல கமலைப் பொட்டலங்கள் நடுவில் சவ்வுதாள் நிறைய கடலைகள் அடுத்துப் பொட்டலமாகக் காத்திருந்தன. முன்பெல்லாம் நிலக்கடலையோ வேறு கடலையோ தனித்தனி பொட்டலமாக விற்பார்கள். இப்போது உப்புக் கடலையும், நிலக்கடலையும் கலந்து விற்கிறார்கள். இந்த மழைப் பொழுதில் வாங்கித் தின்ன ஆசை தான. 3 மணிக்கு கட்சிக்காரர் கொடுத்த பிரியாணி இன்னும் செரிக்கவில்லை. அவரிடம் மறுக்கவும் சங்கடமாக இருந்தது. ஓய்வூதியம் வாங்கிக் கொண்டு ஓய்வெடுக்க வேண்டிய முதுமை அவருக்கு இருந்தாலும் முகத்தில் தெரியும் வறுமை ரேகை இந்த இரவு நேரத்தில் அலையவிட்டிருக்கிறது.



“இல்ல வேணாங்க!” என் சொற்கள் அவரின் எதிர்பார்ப்பை ஏமாற்றின அடுத்து குடை பிடித்தவர்களை நோக்கி அவர் நடந்தார். அலைகடலென திரண்டிருக்கும் வாக்காளப் பெருமக்களே!...” என்று வெற்று நாற்காலிகளைப் பார்த்து முழங்கியது மேடைக்குரல். 10 மணிக்கு முடிக்க வேண்டிய கூட்டம், ஆளுங்கட்சி என்பதால் பத்தரையைக் கடந்தும் நடந்து கொண்டிருந்தது. பொறுக்க முடியாத வானம் பொத்துக் கொண்டு பொலபொலவெனக் கொட்டித்தீர்த்தது. அந்த ஒலிபெருக்கியின் குரல்கள் வானத்திற்குத் தவளைச் சத்தமாகக் கேட்டிருக்கும் போலிருக்கிறது.

நான் ஓடிச் சென்று பக்கத்தில் இருந்த பூட்டிய கடையோரம் நின்று கொண்டேன். கடலை விற்ற பெரியவர் தலையிலிருந்த முண்டாசை அவிழ்த்து கடலையை மூடித் தூக்கிக் கொண்டு அவரும் ஓடிவந்தார். கடையோரம் இருந்த படிக்கட்டில் நனையாதப்படி கடலைத் தட்டை வைத்துவிட்டு அமர்ந்து கொண்டார். மழை வலுத்தது. இப்போதைக்கு விடாது போலிருந்தது. “தம்பி, இந்தாங்க காசு வேணாம்! என்னிடம் ஒரு பொட்டலத்தை நீட்டினார். எனக்குப் பசிப்பது போலிருந்தது. அதை வாங்கிக் கொண்டு பணத்தை எடுத்துக் கொடுத்தேன். அவர் மறுத்தார். “உங்க கிட்ட காசிருந்தா, அப்பவே வாங்கிருப்பீங்களே! இது எதுக்காவது வச்சிருந்திருப்பீங்க; வேண்டாம் என்றார். நான் அவர் பைக்குள் திணித்தேன் அதில் இரண்டு, மூன்று சில்லறைக் காசுகளும் பணத்தாள்களும், தான் தட்டுப்பட்டன. நான் கடலையைப் பிரித்து வாயில் போட்டுக் கொண்டேன்.

“ஐயா, சரியா விக்கலையா?” என்றேன். அவர் உதடு பிதுக்கினார். “எங்க தம்பி...

இத நம்பி வீட்டுக்காரி செலவுக்கு வச்சிருந்த பணத்தை எடுத்து கல்ல வாங்கிப்புட்டேன். வாங்குனது அப்புடியே இருக்கு; ஒண்ணும் ஓடல" என்றார் வெறுமையாய். "இதெல்லாம் என்னா பண்ணுவீங்க? அடுத்து ஏதும் கூட்டத்துல விப்பீங்களா? இப்போதைக்கு கூட்டம் எதுவும் இல்லையே..." அவர் துண்டை உதறி தலையைத் துடைத்து விட்டு அதை பிரிமனை போலச் சுருட்டிக் கொண்டிருந்தார். "இத விக்க ஒருவாரம் பத்து நாள் ஆகும். கப்பலுடையான் தான் எங்க ஊரு

அங்க, வண்டி போற வரைக்கும் கதவி சாத்தியிருக்கும். அப்ப காத்திருக்கிற மக்கள் விக்கிறது தான்" என் பொட்டலத்திலிருந்த கடைசி கல்லையும் தீர்ந்து போனது. அப்போது தான் அவரது பசி பற்றி நினைக்கத் தோன்றியது. "ஐயா சாப்பிட்டீங்களா?" என்றேன். "ஏதாவத வித்தாக்கா சாப்டுவேன். இல்லனா அப்படியே வீட்டுக்குப் போய்டுவேன். கடைசி வண்டியும் போய்டுச்சி இன்னைய இராப்பொழுது இங்க தான்" என்றவாறு துண்டை தலைக்கு முட்டுக் கொடுத்து ஒருக்கணித்து படுத்தார். சுற்றும் முற்றும் பார்த்தேன். சாப்பிட ஏதாவது வாங்கிக் கொடுக்கலாமென்றால் கண்ணுக்கு எட்டிய வரை எந்தக் கடையும் இல்லை. சரி நறுமுகைக்கு வாங்கி வைத்திருந்த பன்னை எடுத்துக் கொடுத்தேன். நறுமுகை என் நான்கு வயது மகள். எந்நேரமானாலும் தூங்காமல் விழித்துக் கொண்டு இருப்பாள். வாசலில் நடைச் சத்தம் கேட்டவுடனே "அம்மா, அப்பா வந்துட்டாங்க மா" என்று கத்திக் கொண்டு ஓடி வந்து காலைக் கட்டிக் கொள்வாள் தலையை அண்ணாந்து கொண்டே, 'திங்க என்னா வாங்கிட்டு வந்த பா?" என்று ஆசையாய்க் கேட்டாள். அவளுக்கு இன்று ஏமாற்றம் தான்! அதை வாங்கிக் கொண்ட அவர் கல்லைத் தட்டிலிருந்த சவ்வுதாள் பைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டனார். "ஐயா சாப்பிட்டு படுங்க, கொஞ்சமாச்சும் பசி அடங்கும்" என்றேன். "பசி பழகிடுச்சி தம்பி, நீங்க குடுத்தத பேத்திக்கு எடுத்துட்டுப் போறேன். எனக்குப் பசியடங்க ஒரு பிடி போதும். வச்சிருக்கீங்களா தம்பி?" எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. "பழக்கம் இல்லைங்க" என்ற என் சொற்கள் அவர் கைக்குள் இருந்த தீப்பெட்டியை கூடைக்குள் போட வைத்தது.

என்னால் பேத்தி நினைவுபடுத்தப் பட்டதும் அவர் குடும்பத்தில் நடந்த துயரத்தை எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்.

"மழை இப்போதைக்கு வெக்காளிக்கிற மாரி தெரியல; ஆனா வேகம் தணிஞ்சிருக்கு; நான் கௌம்புறேன் ஐயா!" தலைக்குச் சவ்வுதாள் பையைக் கவிழ்த்துக் கொண்டு மணியடித்தவாறே வேகமாய் மிதிவண்டியை மிதிக்கத் துவங்கினேன்.

அதற்குப் பிறகு இந்த மாவீரர் நாள் கூட்டத்தில்தான் அவரைப்பார்த்தேன். வழக்கம் போல் நான் ஓரமாய் உட்கார்ந்திருந்தேன். அப்போது தான் அவர் என்னை நோக்கி வந்தார். 'தம்பி நல்லாருக்கீங்களா' என்றார். எனக்குச் சட்டென்று பிடிபடவில்லை. "என்னா தம்பி மறந்துட்டீங்களா? மன்னார்குடி கூட்டத்துல பார்த்தோமே..." ஊரைச் சொன்னதும் தான் நினைவுக்கு வந்தது. "ஐயா நீங்களா நல்லாருக்கீங்களா? "இருக்கேன் தம்பி, கொஞ்சம் இந்த கடலை பையைப் பாத்துக்கோங்க" பெரிய பெரிய பைகளை வைத்தார். இவை அன்றைக்கு எடுத்து வந்ததை விடப் பெரிய பைகள். இவருக்குத் தான் எவ்வளவு நம்பிக்கை! இன்றைக்காவது இவருக்கு விற்பனை ஆக வேண்டும் என நினைத்துக் கொண்டே திரும்பிப் பார்த்தேன். அவா அங்கே இல்லை. மின்னல் மாதிரி கூட்டத்திற்குள் புகுந்து விற்றுக் கொண்டிருந்தார். உட்கார நாற்காலி இல்லாமல் பெருங்கூட்டமாய் நின்று கொண்டிருந்தார்கள்.

குழந்தைகள் இளசுகள் எல்லோரின் கைகளிலும் கடலைப் பொட்டலங்கள். இடையிடையே வந்து தாளில் சுருள் போட்டு ஒரு சுண்டு நிலக்கடலையும் ஒரு சுண்டு உப்புக் கடலையும் ஒவ்வொரு பொட்டலத்திலும் போட்டு விரைவாக மடித்து கூட்டத்திற்குள் புகுந்து காணாமல் போய் விடுவார். என்னருகே வைத்துக் கொண்டு இருங்க கடலைப் பைகளின் தொந்தி கொஞ்சம் கொஞ் சமாகக் குறைந்து கொண்டிருந்தது. இடையே நான் கூட்டத்தில் 'ஆழ்ந்து விட்டேன்; அவர் வருவதையும் போவதையும் கவனிக்கவில்லை. திடீரென வந்த பீடியின் புகை என்னைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. அங்கே ஓரமாய்

ஒரு இருளில் அவர் துண்டை விரித்துப் போட்டு உட்கார்ந்திருந்தார். வாயில் பீடி; கையில் 500 ரூபாய் தாள்களை எண்ணிக் கொண்டு இருந்தார். இங்கிருந்தப்படி நானும் எண்ணினேன். அது ஐயாயிரத்தைக் கொண்டு கடந்து போய்க் கொண்டிருந்தது. எண்ணி முடித்தவுடன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டார். அதற்குப் பிறகு 200, 100, 50 சில்லறை எல்லாம் முன் பையில் இப்போது அவர் சம்மணத்தை அட்டாணிக்கால் போல் போட்டுக் கொண்டார். அடுத்து ஒரு பீடியைப் பற்றவைத்துக் கொண்டு புகை விட்டார். அவரின் தோரணை உலகத்தை வெற்றி கொண்ட ஒரு மன்னனைப் போல் இருந்தது. எனக்குப் புகைப்பது பிடிக்காது. அன்று பசிக்கு ஒரு பீடி கேட்டாரென்றால் அதன் மதிப்பு என்னவென்று புரிந்து கொண்டேன்.

பெரியவரின் மகன் திருப்பூருக்கு வேலைக்குச் சென்றது. அங்கிருந்து ஒரு பெண்ணை அழைத்து வந்தது ஒரு பெண் குழந்தையைப் பெற்று கையில் கொடுத்து விட்டு போதையில் அடிபட்டுச் செத்தது; மருமகளையும் பேத்தியையும் இந்த முதுமையிலும் சுமப்பது; ஆகிய துயரங்கள் இந்தப் புகையோடு கரைந்து போகிறதென்றால் என்னவென்று சொல்வது? என் பக்கத்திலிருந்த பையைத் திரும்பிப் பார்த்தேன். அதிலிருந்த கடலைகள் தீர்ந்து விட்டிருந்தது எனக்கு நிம்மதியாக இருந்தது. கூட்டம் இன்னும் முடியவில்லை. பசி வயிற்றைக் கிள்ளியது. சற்று நேரமாகியிருக்கும், அந்தப் பெரியவர் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவர் கையில் தட்டு இருந்தது.

“தம்பி உங்களுக்கு தான் தள்ளுவண்டிக்கு கடைல சூடா இட்லியப் பார்த்தேன். வாங்கிட்டு வந்துட்டேன். சாப்பிடுங்க என்று கொடுத்தார்” எனக்குள் ஒரு சிலிர்ப்பு! நாம் இத்தனை நாளாய் கவனிக்காமல் இருந்த எளிய மனிதர்களின் வாழ்வும் அன்பும் எத்தனை உயர்வானது!

# வாழ்க்கைப் பாடம்

**க**ல்யாண வயசுல பொண்ண வச்சுக்கிட்டு "எம்பொண்ணுக்கு சுடுதண்ணி கூட வெக்கத் தெரியாது" ன்னு பெருமையா சொல்ற பெத்தவங்கள பாத்தா கடுப்பா வருது!

கல்யாணத்துக்கு முன்னாடியே ஒரு சில விஷயங்கள பொண்ணுங்களுக்கு கத்துக்கொடுக்க வேண்டியது அவசியம்!

தினமும் வீட்ட கூட்டு! பாத்திரத்த சுத்தமா கழுவி பழகு! உன் துணிய நீயே துவைச்சுக்கோ! வாரம் ஒரு தடவை பாத்ரூம் கழுவு! சமையல் கத்துக்கோ! வயசானவங்க முன்னாடி கால் மேல கால் போட்டு ஒக்காராத! வீட்டுல ஆண்கள் யார் இருந்தாலும் துப்பட்டா போடு! (அப்பா, அண்ணனா இருந்தாலும்)

இந்தமாதிரி வேலைகளை செய்யும்போது அவங்கள பாராட்டுரது ரொம்ப முக்கியம்..

குறிப்பா "அம்மா சமையலவிட உன் சமையல் சூப்பர்டா" ன்னு சொல்ற அப்பாவின் பாராட்டுதான் பொண்ணுங்களுக்கு கோல்டு மெடல்!

இப்படி கசப்பு மருந்து குடுத்து வளர்க்கப்படற பொண்ணுங்க போற இடத்துல அழகா சமாளிச்சு வேரூன்ற ஆரம்பிச்சுரும்!



ஆனா இது எதையும் கத்துக்குடுக்காம வளர்த்தற பொண்ணுங்களுக்கு போற இடத்துல சமையல் செய்யச் சொன்னாகூட கோவம்தான் வரும்!

அதும் மாமியார் மாமனாருக்கு செய்ய சொன்னா கேக்கவே வேண்டாம்... அப்புறம் கண்ண கசக்கிட்டு வந்து அம்மா வீட்ல நிக்கும்! நம்மாளுகளும் கொஞ்சம் ஏத்திவிடுவாங்க! கடைசியில அது டைவர்ஸ்ல போய் நிக்கும்! பெண் என்பவள் பிரபஞ்ச சக்தி!

அத ஆக்கசக்தியா ஆக்கறதும், அழிவுசக்தியா மாத்தறதும் பெத்தவங்கிட்டதான் இருக்கு!

# மூத்தோர் அனுபவ அறிவியல்

**ஏ**ன்டா, சளி பிடிச்சிருக்கா? சரியாத் தூங்கலையா? குரல் கம்முது! என்று கேட்டுப் பதறும் நம் அம்மாக்கள், எந்தப் பல்கலைக்கழகத்திலும் எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்றிருக்கவில்லை

.'வானம் வடக்கே கருக்கலா இருக்கு, மழை வருமாட்டு இருக்கு, மாடில காயிற வத்தலை எடுத்துட்டு வா' என்று சொன்ன பாட்டி வானிலை அறிவியல் படித்தது இல்லை.

ஆடிப் பட்டம் தேடி விதை என இன்றைக்கும் சொல்லும் வரப்புக் குடியானவன் விவசாயக் கல்லூரிக்குள் மழைக்குக்கூட ஒதுங்கியது இல்லை.

வயிறு உப்புசமா இருக்காமாந்தமாயிருக்கும் கொஞ்சம் ஓமத்தை வாணலில லேசாக் கறுக்கி, நாலு டம்ளர் தண்ணி விட்டுக் கொதிக்க வெச்சு ராத்திரி கொடு' என்ற அனுபவத்துக்குள் அறிவியல் ஒளிந்திருக்கிறது.

ஏழு மாதக் குழந்தைக்கு மாந்தக் கழிச்சல் வந்தபோது, வசம்பைச் சுட்டுக் கருக்கி, அந்தக் கரியைத் தாய்ப் பாலில் கலந்து கொடுத்த தாய்க்கு இன்று திட்டு விழுகிறது.

'கைக் குழந்தைக்கு ஏன் வசம்பைக் கொடுத்தே? குழந்தைகளுக்கு வசம்பைக் கொடுக்கக்கூடாதுனு அமெரிக்காவுல எச்சரிச்சிருக்காங்க' என்று கரித்துக் கொட்டுகிறார்கள்.

வசம்பில் 0.04 சதவிகிதம் மட்டுமே உள்ள அசரோன் என்ற பொருள் நச்சுத்தன்மைக் கொண்டது என இன்றைய விஞ்ஞானம் கண்டறிந்திருக்கலாம். ஆனால், வசம்பைச் சுட்டுக்கருக்கும்போது அந்த அசரோன்காணாமல் போய்விடும் என்பதை அன்றைய அனுபவ அறிவியல் உணர்ந்திருந்தது. பேச்சு வர தாமதமாகும் குழந்தைக்கும், மாந்தக் கழிச்சலுக்கும், இன்னும் பல குழந்தை நோய்க்கும் மிக அற்புதமான மருந்தாக விளங்கும் வசம்புக்குப் பாட்டி வைத்தியப் பெயர் என்ன தெரியுமா?





'பிள்ளைவளர்ப்பான்' !'

சளி பிடிச்சிருக்கா? கற்பூரவல்லில பஜ்ஜி போட்டுக் கொடுங்க. மத்தியான ரசத்தில் கொத்தமல்லியோட கொஞ்சம் தூதுவளை, கொஞ்சம் துளசிப் போடுங்க;

மலச் சிக்கல்ல கஷ்டப்படுறானா? ராத்திரில பிஞ்சு கடுக்காயைக் கொட்டையை எடுத்துட்டு வறுத்து பொடி செஞ்சுக் கொடுங்க. சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலக்காய், சீரகம் இந்த அஞ்சையும் வறுத்துப் பொடிசெய்து, சரிக்குச் சரியா பனைவெல்லம் கலந்து மூணு சிட்டிகை கொடுத்தா, பசிக்கவே பசிக்காத பிள்ளை கன கனனுபசி எடுத்துச் சாப்பிடும்.

வாய்ப் புண்ணுக்கு மணத்தக்காளி கீரையில சிறுபருப்பு போட்டு கொஞ்சம் தேங்காய்ப் பால் விட்டு, திருநெல்வேலி சொதி செஞ்சு கொடுங்க.

பித்தக் கிறுகிறுப்புக்க முருங்கைக்காய் சூப். மூட்டு வலிக்க முடக்கத் தான் அடை.

மாதவிடாய் வலிக்கு உளுத்தங்களி. குழந்தை கால்வலிக்கு ராகிப் புட்டு.

வயசுப் பெண் சோகைக்கு கம்பஞ்சோறு. வயசான தாத்தாவின் கால்வீக்கத்துக்க வாழைத்தண்டுப் பச்சடி' என விரியும் இந்தப் பட பட பட்டியலில் இடம் பெற்றிருக்கும் அத்தனையு சில நேரம் மருந்துகள்;பல நேரம் மருத்துவ உணவுகள்.

காப்புரிமைப் பிடியில்லா இந்த அடுப்பங்கரையின் அறிவியல் நம் தொன்மைச் சிறப்பு மட்டுமல்ல வரும் நாட்களில் தொற்று நோய்க் கூட்டத்தின் பிடியில் நாம் சிக்கித் தவிக்காமல் இருக்க உதவும் ஒரே வழி.

**தகவல்:மயிலாடுதுறை ஞானசம்பந்தம்**

# உளுந்தில் மிகுந்திருக்கும் நன்மைகள்!

**நா**ம் அன்றாடம் சாப்பிடும் உணவில் குழம்பு, கூட்டு போன்றவற்றுக்கு பல வகையான பருப்புகளை பயன்படுத்துகின்றோம் அவற்றில் உடலுக்கு பல நன்மைகளைத் தரும் பருப்பு வகையாக உளுந்து இருக்கிறது. அந்த உளுந்தில் வெள்ளை உளுந்து கருப்பு உளுந்து என இருவகை இருக்கின்றன .இதில் கருப்பு உளுந்து சாப்பிடுவதால் உடலுக்கு ஏற்படும் நன்மைகள் என்ன என்பதை இங்கே தெரிந்து கொள்ளலாம்.

செரிமான திறன் கருப்பு உளுந்தில் நார்ச்சத்து அதிகம் உள்ளது கருப்பு உளுந்தை அதிகம் சாப்பிடுபவர்களுக்கு அந்த உளுந்தில் இருக்கும் முழுமையான சத்து ஜீரண உறுப்புகளால் கிரகிக்கப்பட்டு செரிமான உறுப்புகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. மலம் கட்டிக் கொள்ளாமல் இலகுவாக வெளியேறவும் கருப்பு உளுந்து வழிவகை செய்கிறது செரிமான திறனும் மேம்படுகிறது.

உணவில் இரும்புச் சத்து குறைபாடு ஏற்பட்டால் பெரும்பாலான குழந்தைகளுக்கு அனிமீயா எனப்படும் ரத்த சோகை நோய் உருவாகிறது கருப்பு உளுந்தில் இரும்புச்சத்து அதிகம் உள்ளது கருப்பு உளுந்தை கொண்டு செய்யப்படும் உணவுகளை குழந்தைகளுக்கு அடிக்கடி உண்ணக் கொடுப்பதால் ரத்த சோகை நோய் விரைவில் தீரும்.

நமக்கு வயது ஏற, ஏற நமது உடலில் உள்ள எலும்புகளும் மூட்டு பகுதியிலும் வலிமை குன்றி உடல் இயக்கத்தை குறைத்து விடும் ஆபத்து உள்ளது கருப்பு உளுந்தில் கால்சியம் பாஸ்பரஸ் பொட்டாசியம் இரும்புச் சத்துக்கள் அதிகம் உள்ளன கருப்பு உளுந்து கொண்டு செய்யப்பட்ட உணவுகளை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் உடலில் எலும்புகள் மூட்டுகளின் வலிமை அதிகரிக்கும் ஆர்த்திரிடிஸ் ஆஸ்டியோபோரோசிஸ் போன்ற எலும்பு சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதையும் தடுக்கும்.

நீரிழிவு நோய் ஒரு கொடுமையான வியாதி ஆகும் நீரிழிவு நோய் ஏற்பட்டவர்கள் நார்ச்சத்து



நிறைந்துள்ள உணவுகளை சாப்பிட வேண்டும் கருப்பு உளுந்தில் நார்ச்சத்து அதிகம் உள்ளது இந்த நார்ச்சத்து நாம் சாப்பிடும் எந்த வகையான உணவுகளிலும் இருக்கும் சத்துக்களை சரி செய்து உடலின் சர்க்கரை அளவை மிதமான அளவில் வைக்க உதவுகிறது.

நமது பண்டைய இந்திய மருத்துவ முறையான ஆயுர்வேதத்தில் சரும சம்பந்தமான வியாதிகள் பிரச்சனைகளைப் போக்க கருப்பு உளுந்து கொண்டு செய்யப்பட்ட உணவுகள் அதிகம் பரிந்துரைக்கப்படுகிறது தோலில் ஏற்படும் தழும்புகள், ஆதீத சூரிய ஒளியால் தோல் கருத்துப் போதல் உள்ளிட்ட பல பிரச்சனைகளை கருப்பு உளுந்து அடிக்கடி சாப்பிடுவதன் மூலம் தீர்கிறது.

இட்லி, தோசைக்கு மாவு அரைக்கும்போது கறுப்பு உளுந்தைப் பயன்படுத்துவது நல்லது. ஏனென்றால் உளுந்துத் தோலில்தான் Leuconostoc mesenteroides என்ற பாக்டீரியா அதிக அளவில் உள்ளது. இட்லி மாவு நன்கு புளிப்பதற்கு இதுவே காரணம். அதேபோல், உளுந்துத் தோலில் கால்சியமும் பாஸ்பரஸும் சம அளவில் உள்ளன. இட்லி, தோசை வெள்ளையாக இருக்க வேண்டுமென நினைத்து, உளுந்துத் தோலில் உள்ள ஊட்டச்சத்தை இழக்க வேண்டாமே..

உடலைத் தூய்மைப்படுத்தி, உடலில் உள்ள நச்சுப் பொருட்களை அகற்றுகிறது*

செரிமான அமைப்பை ஆரோக்கியமாகப் பராமரிக்கவும், வயிற்றுப்போக்கைத் தடுக்கவும் உதவுகிறது

# கருப்பட்டிக்காக ஓடிய ரயில்!



70 ஆண்டுகளுக்கு முன்பு திசையன்விளையில் இருந்து திருச்செந்தூர் வரை ஓடிய தேரிக்காட்டு ரயில், பழைய தலைமுறைக்கு மட்டுமே பரிச்சயம். 1914 முதல் 1940 வரை அந்த ரயில் இயக்கப்பட்டதாக ரயில்வே வாரிய ஆவணங்கள் கூறுகின்றன. அந்த ரயிலின் பின்னணி இதுதான்...

சென்னையைத் தலைமையிடமாக கொண்ட 'பாரி அன் கோ' நிறுவனம் குலசேகரன்பட்டினத்தில் ஒரு சர்க்கரை ஆலையைத் துவங்கியது. அந்த ஆலையின் சரக்குப் போக்குவரத்துக்காக 'குலசேகரன்பட்டினம் லைட் ரயில்வே' (கே.எல்.ஆர்) என்ற பெயரில் ரயில் பாதை அமைக்கப்பட்டது. திருச்செந்தூரில் இருந்து திசையன்விளைக்கும், குலசேகரன்பட்டினத்திலிருந்து உடன்குடிக்கும் தனித்தனியாக சுமார் 46 கி.மீ தூரத்திற்கு ரயில் பாதை உருவாக்கப்பட்டது. இந்த தேரிக்காட்டு ரயிலின் பயணம், அந்த கிராமங்களில் புதியதொரு அத்தியாயத்தை உருவாக்க ஆரம்பித்தது...

அந்த ரயில இப்ப நெனச்சாலும் மனசு நெறஞ்ச மாதிரி இருக்கு. பிராயத்துல மாட்டு வண்டில தொங்கிட்டு போறதுக்கே நாங்க ரொம்ப சந்தோஷப்படுவோம். பாரி கம்பெனிக்காரன் ரயிலும் அதே வேகத்துலதான் போகும் அதுல ஏறி ஏறி இறங்குறதுன்னா ஏக குஷிதான். நான் பிச்சிவிளை ஸ்டேஷன்ல 6 மாசம் மட்டும் ஸ்டேஷன் மாஸ்டராவே இருந்திருக்கேன். மாசம் 23 ரூவா சம்பளம். அன்னைக்கி அது பெரிய காசு" என படுக்கையில் இருந்து எழ முடியாமல் விசும்பினார் 97 வயதாகும் ஜெயமுருகையா.

"இன்னிக்கி நீங்க பார்க்கிற திசையன்விளையே வேற தம்பி. அந்தக் காலத்துல இதே தேரிகாட்ல பயினி (பதநீர்) வாசனை கமகமன்னு தூக்கும். பொழுது விடியறதுக்குள்ளே பயினிய கொண்டாந்து பாரிக்காரன் வச்சிருக்கிற தொட்டியில அளந்து ஊத்திடுவாங்க. தேரிக்காட்டு பயினிய கொண்டு போறதுக்கு அவங்க திசையன்விளைல இருந்து குலசேகரப்பட்டினம் வரைக்கும் குழாயே பதிச்சிருந்தாங்க. குழாயில பயினிய ஊத்தி விட்டா சீனி ஆலைக்குப் போய் சேந்துரும். இதே தேரி காட்ல அப்ப 50 பனமரம் இருந்தா போதும், ஆயுசுக்கும் நிம்மதி!" என பழங்கால நினைவுகளை அசை போட்டார் திசையன்விளை கருப்பட்டிக் கடை உரிமையாளர் ஜெயராமன்.

பதனீரும், கருப்பட்டியுமே தேரிக்காட்டு ரயிலின் ஆரம்பகால தேடலாக இருந்திருக்கிறது. ஆங்கிலேயே அரசு அதிகாரிகள் வற்புறுத்தியதின் பேரில், பின்பு பயணிகள் ரயிலும் இயக்கப்பட்டிருக்கிறது. இரண்டு அடி அகலம் கொண்ட இந்த ரயில்பாதையில் திசையன்விளை, இடைச்சிவிளை, தட்டார்மடம், சொக்கன்குடியிருப்பு, படுக்கப்பத்து, பிச்சிவிளை, குலசேகரன்பட்டினம், ஆலந்தலை, உடன்குடி ஆகிய ஊர்களில் ரயில் நிலையங்கள் இருந்தன.

"திசையன்விளையில உள்ள எங்க பாட்டி வீட்டுக்கு 2, 3 முறை நான் அதுல போய் வந்திருக்கேன். அப்போ எனக்கு 6 வயசிருக்கும். என் டிரவுசரை கழட்டிட்டுத்தான் எங்கப்பா அந்த வண்டியில கூட்டிட்டுப் போனாரு. ஏன்னா, அம்மணமா போற சின்ன புள்ளைக்கு டிக்கெட் கெடையாது. கால் துட்டுக்கு அந்த ரயில்ல ஓமப்பொடி கொடுப்பாங்க. அப்படியே நாக்குல எச்சி ஊறும். அந்த ட்ரெயின்ல குடிக்கிறதுக்கு கலரு கேட்டு நா அழுதுருக்கேன்" என்னும் கொம்மடிக்கோட்டை சிம்சோனுக்கு இப்போது 83 வயது.

"குலசேகரன்பட்டினத்தில் இருந்த சிறிய ஆலையில் பதநீர் காய்ச்சப்பட்டு, திரவமும் இல்லாமல், திடமும் இல்லாமல், 'பானி' எனப்படும் களிபோன்ற பதநிலையில்தான் ரயில்களில் அவை பெரிய ஆலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. அங்கு அவை சீனியாக மாற்றப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியானது" எனக் குறிப்பிடுகிறார் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர் சிவசுப்பிரமணியன்.

**தகவல்: கோவில்பட்டி முத்துலட்சுமி**



# உடலைப்பாதுகாக்க தினம் ஒரு சிறுதானியம்!

ஐக்கிய நாடுகள் சபை 2023 ம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக பிரகடனம் செய்து, உலகம் முழுவதும் சிறு தானியத்தின் சிறப்புகளை கொண்டாடி வருகிறோம். உணவு தட்டுப்பாடு, பஞ்சகாலங்களில் அரிசி, கோதுமை உணவுகளுக்கு மாற்றாக நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் ஊட்டச்சத்துகளை மேம்படுத்தும் உணவாக சிறுதானியங்களில் இருந்து செய்யப்படும் உணவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. தற்போது ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளில் 50 கோடிக்கும் மேற்பட்டோரின் பாரம்பரிய உணவாக சிறு தானியங்கள் இருந்து வருகிறது.

உலகில் மாறிவரும் பருவகால மாற்றங்கள், குறைவான மழை பொழிவு, குன்றிய மண்வளம், தேவைக்கு அதிகமாக உரப் பயன்பாடு ஏற்படுத்தும் சூழல் கேடுகள், வேளாண் இடுபொருள் விலை ஏற்றம் போன்றவை எதிர்வரும் காலங்களில் உலகளாவிய மக்கள் அனைவரும் சிறுதானியங்களை பிரதான உணவாக்கி கொள்ளவேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.

"கம்பு, சோளம், வரகு, பனிவரகு, கேழ்வரகு (ராகி), சாமை, தினை, குதிரைவாலி போன்றவையே சிறுதானியங்கள்"

"நம்முடைய பிரதான உணவாகக் கருதப்படும் அரிசியில் இருப்பதைவிட அதிக சத்துக்களையும், வைட்டமின் களையும் சிறுதானியங்கள் கொண்டுள்ளன. இவை புரத பசையமற்ற (Gluten), குறைவான சர்க்கரை அளவு கொண்ட தானிய வகையாகும். இவற்றில் பொதுவாக 7-12% புரதம், 2-5% கொழுப்பு, 65-75% கார்போஹைட்ரேட், 15-20% உணவு நார்ச்சத்து, வைட்டமின்கள், நுண்ணூட்டச்சத்துக்கள், தாவர ரசாயனங்கள் மற்றும் அமினோ அமிலங்களும் உள்ளன. கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், மாங்கனீசு, துத்தநாகம், இரும்பு மற்றும் தாமிரம் போன்ற தாதுக்களின் அதிக செறிவு பெற்றிருப்பதன் மூலம்"சிறந்த" சிறு தானியமாக கம்பு விளங்குகிறது. கணிசமான எண்ணெய் சத்தும், கொழுப்பில் கரையக்கூடிய வைட்டமின் E (2 mg/100 g) கம்பில் உள்ளன. பொதுவாக அதிக பயன்பாடு மற்றும் பிரதான உணவாக இருப்பதால் சோளம் சிறுதானியங்களில் "அரசன்" என அழைக்கப்படுகிறது. அதிக ஊட்டச்சத்துக்கள் உள்ளடங்கிய கேழ்வரகு "ஆரோக்கிய சிறுதானியம்" (Healthiest millet) எனப்படுகிறது.



எஸ்.சூர்யா

குறிப்பாக சிறுதானியங்களை உட்கொள்ளும்போது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி பன்மடங்கு அதிகரிக்கும். உடல் பருமன் குறைவதுடன், இதயநோய் உள்ளிட்ட நோய்கள் வராமல் தடுக்கப்படும் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள். பாரம்பரிய அரிசி வகைகளையும், சிறு தானியங்களையும் அன்றாட முக்கிய உணவாக உட்கொள்ளப் பழகிக் கொண்டால் உடல் ஆரோக்கியமாக வாழலாம்"

# தேர்வாணையம் பற்றி தெரிந்து கொள்வோம்!

இளைஞர்களே இதனை தெரிந்துகொண்டு இனியாவது கல்வியில் முன்னுக்குவாருங்கள்.

TNPSCஇல் எத்தனை குரூப் உள்ளது? உங்களுக்கு தெரியுமா?

**குரூப் 7, 8 பற்றி தெரியுமா?**

TNPSC தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் குரூப் சேவைத் தேர்வுகள்/பதவிகள் அது என்னென்ன என்று உங்களுக்கு தெரியுமா? தெரியவில்லை என்றால் அதன் முழுவிவரங்கள் பின்வருமாறு?

How Many Groups in TNPSC?

குரூப் - 1, குரூப் - 2, குரூப் - 3, குரூப் - 4, குரூப் - 5, குரூப் - 6, குரூப் - 7, குரூப் - 8

**குரூப் - 1 சேவைகள் (Group-I)**

1)துணை கலெக்டர்

(Deputy Collector)

2)துணை போலீஸ் சூப்பிரண்டு (வகை – I) (Deputy Superintendent of Police)

3)மாவட்ட பதிவாளர், பதிவுத் துறை

(District Registrar, Registration Department)

ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் (பஞ்சாயத்து)

4)கலெக்டருக்கு தனிப்பட்ட உதவியாளர் (மேம்பாடு) (Assistant Director of RD Dept (Panchayat) /Personal Assistant (Development) to Collector)

5)மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (District Employment Officer)

6)தீயணைப்பு மற்றும் மீட்பு சேவைகளில் பிரதேச அலுவலர்

(Div. Officer in Fire and Rescue Services)

7)உதவி ஆணையர் (சி.டி.) (Asst Commissioner)

8)கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் (Deputy Registrar of Co-operative Societies)

**குரூப் – 1A சேவைகள் (Group-I A)**

1)உதவி காடுகளின் பாதுகாவலர் (Assistant Conservator of Forests)

குரூப் – 1B சேவைகள்

**(Group-I B)**

1)உதவி ஆணையர் H.R & C.E (Assistant Commissioner, H.R. & C.E)

**குரூப் – 1C சேவைகள்**

(Group-I C)

1)மாவட்ட கல்வி அலுவலர் DEO

(District Educational Officer)

2)ஒருங்கிணைந்த சிவில் சர்வீசஸ் தேர்வு 2

**குரூப் – 2 சேவைகள்** (நேர்முகத்தேர்வு பதவிகள்)

1) துணை வணிக வரி அதிகாரி
2) நகராட்சி ஆணையர், தரம் 2
3) இளைய வேலைவாய்ப்பு அதிகாரி (வித்தியாசமாக இல்லாதவர்)
4) இளைய வேலைவாய்ப்பு அதிகாரி
5) துணை பதிவாளர்,
 தரம் 2
6) தொழிலாளர் உதவி ஆய்வாளர்
7) உதவி பிரிவு அதிகாரி (சட்டம் மற்றும் நிதி தவிர துறை)
8) உதவி பிரிவு அதிகாரி (சட்டத்துறை)
9) உதவி பிரிவு அதிகாரி (நிதித்துறை)
10 தமிழ்நாடு பொது சேவையில் உதவி பிரிவு அதிகாரி ஆணைக்குழு
 உதவி பிரிவு அதிகாரிகம்புரோகிராமர்
11) உதவி பிரிவு அதிகாரி, தமிழ்நாடு சட்டமன்றம் செயலக சேவை
12) நன்னடத்தை அலுவலர், சமூக பாதுகாப்பு
 நன்னடத்தை அலுவலர்,
13) சிறைத் துறை தொழில்துறை கூட்டுறவு அதிகாரி, கைத்தொழில் ஆணையர் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக இயக்குநர்
14) பெண்கள் நல அலுவலர், சமூக பாதுகாப்பு
15) சர்வே இயக்குநர் மற்றும் தீர்வுகளுக்கான Reg.Coop Society இல் உள்ள கூட்டுறவு சங்கங்களின் மூத்த ஆய்வாளர்
16) வரவேற்பாளர், தமிழகம் விருந்தினர் மாளிகை,
17) உதகமண்டலம் தொழில்துறை கூட்டுறவு தொழில்துறை மேற்பார்வையாளர்
18) கமிஷனர் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக இயக்குநர் துறை
19 திட்ட உதவியாளர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தணிக்கை பிரிவில் உள்ள தணிக்கை ஆய்வாளர்




இந்து மத மற்றும் அறக்கட்டளை நிர்வாகத் துறை

உள்ளூர் நிதி தணிக்கைத் துறையின் உதவி ஆய்வாளர் மற்றும் உள் தணிக்கைத் துறை

மேற்பார்வையாளர் / மூத்த எழுத்தர் / தலைமை கணக்காளர் / ஜூனியர்தமிழ்நாடு வேளாண் சந்தைப்படுத்தல் கண்காணிப்பாளர் துணை சேவை

உதவி ஜெயிலர், சிறைத்துறை.

வருவாய் துறையில் உதவியாளர் டவுன் பஞ் சாயத்துத் துறையில்

நிர்வாக அதிகாரி,

தரம் 2 டி.வி.ஐ.சியில்

சிறப்பு உதவியாளர்

கைத்தறி ஆய்வாளர் போலீஸ் திணைக்களத்தின் புலனாய்வு பிரிவில் சிறப்பு கிளை உதவியாளர்.

பால் உற்பத்தியில் கூட்டுறவு சங்கங்களின் மூத்த ஆய்வாளர் மற்றும் பால் மேம்பாடு

தொழிலாளர் உதவி ஆய்வாளர்

தணிக்கை உதவியாளர் நெடுஞ்சாலைத் துறையில் கணக்கு கிளையில்.

குரூப் - 2A சேவைகள் (நேர்முகத்தேர்வு இல்லாத பதவிகள்) (Group-II A)

கருவூல மற்றும் கணக்குத் துறையில் கணக்காளர்

ஜூனியர் கூட்டுறவு கணக்காய்வாளர் செயலகத்தில் உதவியாளர் (சட்டம் மற்றும் நிதி தவிர)

இளைய தொழில்நுட்ப உதவியாளர், சிவில் சப்ளைஸ் துறை

தனிப்பட்ட எழுத்தர் (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர) தனிப்பட்ட எழுத்தர் (சட்டத்துறை) தனிப்பட்ட எழுத்தர் (நிதித்துறை) தமிழ்நாடு பொது சேவையில் தனிப்பட்ட எழுத்தர் ஆணைக்குழு தனிப்பட்ட எழுத்தர், தமிழ்நாடு மாநில திட்டமிடல் ஆணையம் தமிழக சட்டசபையில் ஸ்டெனோ டைப்பிஸ்ட் செயலக சேவை உதவியாளர் பல்வேறு துறைகள், செயலகத் துறையில் உதவி (நிதித்துறை), தமிழ்நாடு பொது சேவை ஆணையத்தில் உதவியாளர் ,

தமிழக சட்டசபையில் கீழ் பிரிவு எழுத்தர், செயலகம்

திட்டமிடல் இளைய உதவியாளர் , வரவேற்பாளர் (சிறு சேமிப்புத் துறை),

சட்டத்துறையில் உதவியாளர்

தமிழ்நாடு சட்டமன்ற சட்டசபை சேவையில் உதவியாளர்

ஒருங்கிணைந்த சிவில் சர்வீசஸ் தேர்வு - 3

**குரூப் – 3 சேவைகள் (Group-III)**

தீயணைப்பு நிலைய அதிகாரி

**குரூப் – 3A சேவைகள் (Group-III A)**

கூட்டுறவு சங்கங்களின் ஜூனியர் இன்ஸ்பெக்டர்

தொழில்துறை கூட்டுறவு சங்கங்களின் உதவி மேற்பார்வையாளர்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி (பயிற்சி பிரிவு) துறையில் கடை வைத்திருப்பவர் கைத்தொழில் மற்றும் வணிகத் துறையில் ஸ்டோர்கீப்பர், கிரேடு 2

**குரூப் - 4 சேவைகள் (Group-IV)**

ஜூனியர் உதவியாளர் (பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு அல்லாத)

பில் கலெக்டர்

தட்டச்சு செய்பவர்

ஸ்டெனோடைப்பிஸ்ட், கிரேடு 3

கள ஆய்வாளர் 6. வரைவாளர்

**குரூப் – 5A சேவைகள் (Group-V A)**

செயலகத்தில் உதவியாளர் (இடமாற்றம் மூலம் ஆட்சேர்ப்பு) (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர)

**குரூப் – 6 சேவைகள் (Group-VI)**

வன பயிற்சியாளர்

**குரூப் - 7A சேவைகள்(Group-VII A)**

நிர்வாக அதிகாரி,

தரம் 1

குரூப் – 7B சேவைகள்

(Group-VII B)

நிர்வாக அதிகாரி,

தரம் - 3

குரூப் - 8 சேவைகள்

(Gro&p-VIII)


நிர்வாக அதிகாரி,

தரம் - 4

இத்தனை தேர்வுகள் பற்றிய விவரங்கள் நம்மில் பலருக்கு முறையான வழிகாட்டல் இல்லாததால் நம்மில் பலர் TNPSC தேர்வுகளைப் பற்றி சரிவர தெரிந்து கொள்ளாமல் இருந்து வருகிறோம்.

**தகவல்:சந்திரசேகர், திருவள்ளுவர் மன்றம்**

## மித்ரா டாக்கீஸ்



ரஜினியின் 171வது திரைப்படத்தை கைதி, மாஸ்டர்,விக்ரம்,லியோ உள்ளிட்ட மிகப்பெரிய ஹிட் படங்களை இயக்கிய இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கவுள்ளார். அந்த படத்திற்கும் இசையமைப்பாளர் அனிருத்தான் இசையமைக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில் தற்காலிகமாக 'தலைவர் 171' என பெயரிடப்பட்டுள்ள இந்த படத்தில் விஜய்சேதுபதி வில்லனாக நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. அவர் ரஜினிகாந்துடன் ஏற்கனவே பேட்ட படத்தில் இணைந்து நடித்துள்ளார். தற்போது புதிய படத்திலும் கைகோர்க்க இருப்பதாக கூறப்படுவதால் படத்தின் மீதான ரசிகர்களின் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

தளபதி 68 படத்தின் மிகப்பெரிய பிளஸ் என்பது யுவன் சங்கர் ராஜா தான். கிட்டத்தட்ட 24 வருடத்திற்கு பிறகு விஜய் படத்திற்கு யுவன் இசை அமைக்கிறார். கடந்த சில வருடங்களாகவே அனிருத் இசையில் ஒரே மாதிரியான பாடல்கள் விஜய்க்கு போடப்பட்டது போல் சலிப்பு தட்டும் விதமாகத்தான் இருக்கிறது. மீண்டும் பல வருடங்கள் கழித்து விஜய் மற்றும் யுவன் சங்கர் ராஜா காம்போவில் பாடல்களை கேட்கலாம்.



### திறமையான இளம் நடிகராக வலம் வரும் சத்தியமூர்த்தி !

நடிகர் சத்தியமூர்த்தி தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் இளம் நடிகர். நடிகர் மட்டுமின்றி தயாரிப்பாளராகவும் இருப்பவர். தப்புத் தண்டா படத்தின் மூலம் அறிமுகமானார். இதனை தொடர்ந்து இவர் நடித்த ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது என்ற திரைப்படம் இந்த ஆண்டு வெளியானது. தற்போது முழுக்க முழுக்க யூடியூப் டீம் உருவாக்கியுள்ள புதிய படத்தில் நடித்துள்ளார். யூத் ரசிகர்களை கவரும் வகையில் எடுக்கப்பட்ட இப்படம் இந்த வாரம் வெளியாகிறது. வழக்கமான ஹாரர் பேய் படமாக இது இருக்காது என்கிறார். நடிகராக தொடர்ந்து தனது திறமையை நிரூபித்து வரும் இவரது நடிப்பில் 2024 ம் ஆண்டில் மேலும் இரண்டு படங்கள் வெளியாக உள்ளது. அது முற்றிலும் மாறுபட்ட கதைக்களத்தில் இருக்கும் என்றார்.

இயக்குனர் ஏ.எல்.விஜய் இயக்கத்தில் தற்போது அருண் விஜய் நடித்துள்ள திரைப்படம் 'அச்சம் என்பது இல்லையே மிஷன் சாப்டர் 1'. இப்படத்தின் கதாநாயகியாக எமி ஜாக்சன் நடிக்க ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார். சமீபத்தில் இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகிறது. எம். ராஜசேகர் மற்றும் எஸ்.சுவாதி தயாரித்துள்ள இப்படத்தை தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் லைகா நிறுவனம் வெளியிடவுள்ளது. 'அச்சம் என்பது இல்லையே மிஷன் சாப்டர் 1' படத்தின் தணிக்கைக்கு முந்திய பணிகளில் அருண் விஜய் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக சமீபத்தில் படக்குழு அறிவித்திருந்தது.




# மதிமாறன் விமர்சனம்




கிராமத்து போஸ்ட்மேன் எம்.எஸ். பாஸ்கர். இவருக்கு இரட்டைக் குழந்தைகள். அதில் ஒருவர் தான் வெங்கட் செங்குட்டுவன் (நெடுமாறன்), மற்றொருவர் இவானா (மதி). நெடுமாறன் உயரத்தில் வளர்ச்சி குறைவாக இருக்கிறார். இதனால், பலரும் அவரை கேலியும் கிண்டலும் செய்து வருவதை எதிர்த்துக் கேட்டு கோபபடுவர்.. அதே சமயம். தனது திறமையை படிப்பிலும், அறிவிலும் தொடர்ந்து நிரூபித்துக் கொண்டே வருகிறார். இவருக்கும் கல்லூரி தோழியான ஆராத்யாவிற்கும் காதல். இந்நிலையில் ஹீரோவின் சிஸ்ட்ரான , இவானா தனது கல்லூரி பேராசிரியரோடு ஓடி போய்விட்டார் என்ற செய்தியறிந்து வீட்டில் அனைவரும் உறைந்து போகின்றனர். இதனால் அப்செட்டான எம் எஸ் பாஸ்கரும் அவரது மனைவியும் தூக்கு மாட்டிக் கொண்டு இறந்து விடுகிறார்கள். இதனால் செய்வதறியாது திகைத்து நிற்கிறார் நெடுமாறன். கோபத்தோடு தனது சகோதரியை காண சென்னை பயணப்படுகிறார். அதே சமயம், சென்னையில் தொடர்ச்சியாக இளம்பெண்கள் கற்பழித்து கொல்லப்படுகின்றனர். தன் தங்கையை கண்டு பிடிக்க முயல்பவர் தனது புத்திசாலித்தனத்தால் போலீசே கண்டுபிடிக்க முடியாத அந்த கற்பழிப்பு குற்ற பின்னணியையும், குற்றவாளியையும் கண்டுபிடிக்கிறார் என்பதே மதிமாறன்படத்தின் கதை.

நிஜமாகவே உயரம் குறைவாக உள்ள வெங்கட் செங்குட்டுவன், குட்டையன் கேரக்டருக்கு ஃபர்பெக்டாக செட் ஆகி விடுகிறார்.. உருவ கேலிக்கு ஆளாகும்போதெல்லாம் ஆவேசமாவது, அப்பா அம்மாவை காப்பாற்ற முடியாமல் போகும்போது கதறித் துடிப்பது, மதி நிறைந்த மாறனாகி நடக்கும் கொலைகளுக்கான காரணத்தை துப்பறிந்து கண்டுபிடிப்பது, காவல்துறைக்கு ஆலோசனை வழங்கி வழிநடத்துவது என சுற்றிச் சுழன்றிருக்கிறார். அப்படி அவர் செய்யும் விஷயங்களில் லாஜிக், நம்பகத்தன்மை எல்லாம் இல்லை என்றாலும் ஒரு அனுபவ நடிகர் என்ன நடிப்பைக் கொடுப்பாரோ அந்த நடிப்பைக் கொடுத்து காட்சிகளை ரசிக்க வைத்திருக்கிறார்.

'லவ் டுடே' போன்ற ஒரு படத்தின் மூலம் இளசுகளை கவர்ந்த இவானா, இப்படி ஒரு வேடத்தில் நடித்தது ஆச்சரியம் தான். இளம் நடிகைகள் நிராகரிக்கும் ஒரு வேடத்தில் நடித்த அவரது தைரியத்தை பாராட்டலாம்.

# வாழ வைத்தது வண்ணத்திரை! வசதியைத் தந்தது சின்னத்திரை!

## -யுவஸ்ரீ

என்னுடைய கலைப் பயணம், திரைப்பயணம் எப்படி ஆரம்பித்தது என்றால், என்னுடைய படம் 'சின்னதம்பி' மற்றும் 'கேப்டன் பிரபாகரன்' அதற்கு முன்னாடி 'மை டியர் மார்த்தாண்டன்' படம் நான் ஒத்துக்கொண்டு இருந்தேன். அதிலிருந்து தான் எனக்கு கேப்டன் பிரபாகரன் படமும், சின்னதம்பி படமும் எனக்கு கமிட் ஆச்சு. அதற்கு பிறகு வரிசையாக நிறைய படங்கள் பண்ணேன். கிட்டத்தட்ட 50 படங்கள் பண்ணியிருக்கேன். இப்போ ரிசன்ட் படம் என்று சொன்னால் விஜய்யின் காவலன் படம் வரைக்கும் பண்ணியிருக்கேன்.

நடுவில் கொஞ்சம் பிரேக் எடுத்து சீரியலில் நல்ல ஆஃபர் வந்தது. அதனால் நிறைய சீரியல் பண்ணேன். திரைப்படங்களில் குணச்சித்திர கேரக்டர் தான் கிடைச்சது. ஆனால் சீரியலில் லீடு ரோல் கிடைச்சது. அதாவது திரைப்படங்களில் பண்ணணும் என்று ஆசைப்பட்டு நினைச்சது எல்லாம் எனக்கு சீரியலில் அமைஞ்சது. அதனால் அப்படியே சீரியலுக்காக விட்டுட்டு போய்ட்டேன்.

சீரியல் என்பது நமக்கு ஆபீஸ் உத்தியோகம் மாதிரி. காலை போய்ட்டு இரவு வீட்டுக்கு வந்து விடலாம். முக்காவாசி நைட் சூட்டிங் எல்லாம் சீரியலில் இருக்காது. எப்பவாவது தவிர்க்க முடியாத காரணத்தினால் மட்டுமே நைட் சூட்டிங் இருக்கும். எல்லா சூட்டிங்கும் சென்னையில் இருந்ததால் எனக்கும் அது வசதியாக இருந்தது. அதனாலேயே மூவிஸ் விட்டு சீரியலுக்கு வந்தேன். மெயினா எனக்கு கேரக்டர் ரோல் எனக்கு நல்லபடியாக அமைந்தது. எனக்கு நிறைய அவார்ட்சும் சீரியல் மூலமாக கிடைச்சது. என்னுடைய கனவு எல்லாம் நனவாச்சு.

என்ன தான் இருந்தாலும் பெரிய திரை அது வேற தான். அப்ப அப்ப பெரிய திரையில் வரும் கதாபாத்திரங்களும் பண்ணிக்கொண்டு தான் இருக்கிறேன். நான் நல்ல நல்ல டைரக்டர் கூட வொர்க் பண்ணேன். சேதுமாதவன், கே.பாலசந்தர், இது மாதிரி பெரிய பெரிய லெஜென்ஸ் கூட நடிக்க வாய்ப்பு கிடைச்சது. அதெல்லாம் கடவுளின் ஆசீர்வாதத்தால் இதெல்லாம் நடந்தது.



# தூங்க வேண்டும் தம்பி தூங்கவேண்டும் !

பட்டுக்கோட்டையார் தன்னுடைய பாடலில் தூங்காதே தம்பி தூங்காதே சொன்னார். சமூக அவலங்களுக்கு எதிராக விழிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக எழுதினார்.

ஆனால் இன்றைய இளைய சமூகம் சரியான நேரத்துக்கு சாப்பிடுவதுமில்லை

சரியான நேரத்துக்கு தூங்குவதுமில்லை. பட்டுக்கோட்டையார் இன்று இருந்தால் தூங்க வேண்டும் தம்பி தூங்க வேண்டும் உடல் நலம் காக்க தூங்க வேண்டும் என்று பாடியிருக்கக்கூடும்

மனிதன் மற்றும் பல விலங்குகளுக்கு தூக்கம் என்பது கண்டிப்பான வாழ்நாள் முழுவதும் தேவையான ஒரு செயல் ஆகும். பெரும்பாலும் இரவு நேரம் என்பதே தூக்கத்துக்காக ஒதுக்கப்பட்டது தான்.

ஆனால் இப்பொழுது எல்லாம் இரவு நேரப் பணிகளைப் பார்த்து விட்டு பகலில் தூங்குகிறவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

இவ்வளவு நேரம் தான் தூங்க வேண்டும் என்று ஒரு அளவுகோல் இருந்தாலும், தூக்கம் அவரவரின் பழக்கத்தைப் பொறுத்தே அமைகிறது.

இரவில் மிக சீக்கிரமாக உறங்கிக் காலையில் தாமதமாக எழுந்து இருப்பவர்கள் உண்டு.இரவு எவ்வளவு தாமதமாகப் படுத்தாலும் வெகு சீக்கிரமாக அதிகாலையிலேயே எழுந்து விடுபவர்களும் உண்டு.

சரியாக தூங்காதவர்களை கண்களைப் பார்த்தே கண்டு பிடித்து விடலாம்.மனிதனின் மனதைக் கட்டுப்படுத்த, கெட்ட எண்ணங்களைச் சீர்படுத்த, கோபம், ஆத்திரத்தைக் குறைக்க இயற்கையாக படைக்கப்பட்ட ஒரு செயல் தூக்கம்..

உடலுக்கு ஓய்வு கொடுப்பதன் மூலம், மீண்டும் புத்துணர்வோடு செயல்படுவதற்கு மூளை தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும்,ஓர் இயற்கையான வழி தான் தூக்கம்.

ஒருவருடைய உடல் உழைப்பு, தூங்கும் விதம், சுற்றுச்சூழல், உடல்நலம், மனநலத்தைப் பொறுத்துத் தூக்கம் அமைகிறது.

முதுமை காரணமாகவோ, உடல்நிலையை பொறுத்துத் தூங்கும் நேரம் குறைந்தாலும் தூக்கத்தின் அவசியம் குறைவதில்லை.

பொதுவாக ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ஆறில் இருந்து எட்டு மணி நேரம் தூக்கம் அவசியம்,.

ஆம்..,நண்பர்களே..,

தூக்கம் உடலுக்கு மட்டுமல்ல, மனத்திற்கும் ஓய்வு அளிக்கிறது.அதே போல தூங்காத மனிதர்களின் மனமும் சோர்வடைவதைக் காணலாம்.

சரியான தூக்கம் இல்லையே என்ற எண்ணமே, மனதிற்குள் கோபமாகவும், துக்கமாகவும் மாறக் கூடும்.

இதனால் தேவையற்ற நிகழ்வுகள் ஏற்படலாம்.

நல்ல சீரான தூக்கம் மனதை ஆனந்தமான நிலையில் வைத்திருக்க உதவும்.

மனமே நமது அன்றாட செயலுக்கு உறுதுணையாக இருக்கும்...மனம் ஆனந்தமாக இருந்தால் நமது வேலையும் திருப்தியாக இருக்கும்.



# ஹெல்மெட்டின் பணி என்ன?

"ஒரு விபத்தின்போது 80 கிலோ எடையுள்ள ஒருவர், 1 மீட்டர் உயரத்திலிருந்து கீழே விழுந்தால் 800 கிலோ வேக பலத்தில் விழுவார்...

அதுவே 2 மீட்டர் உயரத்திலிருந்து விழுந்தால் 1600 கிலோ வேக பலம்...

இவ்வளவு வேக பலத்தை ஹெல்மெட் போடாத நமது தலையால் நிச்சயம் தாங்கிக்கொள்ள முடியாது. 800 கிலோ வேக பலம் தாக்கினாலே மனித மண்டையோடு உடைந்துவிடும்.

இதனால் மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டு இறப்பு நேரிடலாம். இதைவிடவும் பல மடங்கு அதிக வேக பலம் நம் தலையைத் தாக்கினாலும் அதைத் தடுக்கும் வேலையைத்தான் ஒரு ஹெல்மெட் செய்கிறது. அவ்வளவு பலத்தைத் தாங்க, ஒரு குறிப்பிட்ட தரத்தில் (ஐ.எஸ்.ஐ) ஹெல்மெட் தயாரிக்கப்படவேண்டும்!"

"அது என்ன ஐ.எஸ்.ஐ. தரம்?"

இந்தியாவில் தயாரிக்கப்படும் தரமான ஹெல்மெட்டுக்கு "பீரோ ஆஃப் இந்தியன் ஸ்டாண்டர்ட்" எனும் பி.ஐ.எஸ் நிறுவனம் தரச் சான்றிதழ் கொடுக்கிறது.

அதன் கீழ் வரும் ஐ.எஸ் 4151 பிரிவில்தான் ஹெல்மெட்டின் தர விதிகள் உள்ளன. இதன்படி ஏ.பி.எஸ் என்று சொல்லப்படும் ஒருவகை உயர் தரமுடைய பிளாஸ்டிக் பொருளை மேல்பகுதியாகப் பயன்படுத்த வேண்டும். அதன் இடைப்பட்ட பகுதியில்...



அதாவது, நடுப்பகுதியில் அடர்த்தியான தெர்மாகோல் இருக்க வேண்டும். இது தவிர, சின் ஸ்ட்ராப் எனப்படும் தாடை நாடா எவ்வளவு இருக்க வேண்டும், அதன் லாக் எப்படி இருக்க வேண்டும்,

தலைக்கு ஏற்ற மாதிரி என்ன வடிவத்தில் உட்புறம் இருக்க வேண்டும் என்பதெல்லாம் இந்த ஐ.எஸ் தர விதியில் இருக்கிறது. இந்த ஹெல்மெட்டுகளில் ஐ.எஸ்.ஐ முத்திரையும் கூடவே மிஷி4151 என்ற குறியீடும் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த ஐ.எஸ் விதிகளுக்கு மாறாக சிமெண்ட், பேப்பர் கூழை இறுக வைத்து ஹெல்மெட் செய்து விலை மலிவாக சந்தையில் விற்கிறார்கள். பலத்த பாதிப்பைத் தாங்கக்கூடிய அடர்த்தியான தெர்மாகோலுக்கு பதிலாக தடிமன் இல்லாத தெர்மாகோல் பயன்படுத்துகிறார்கள்.

இவற்றை வாங்கி அணிந்தால் ஹெல்மெட் போட்டும் போடாத கதைதான்... "எதைத் தேர்ந்தெடுப்பது?"

"நமது தலையின் அளவுக்கு ஏற்ப சரியாக ஃபிட் ஆகும் ஹெல்மெட்டை மட்டும்தான் வாங்க வேண்டும்.

ரொம்பவும் லூஸாக இருந்தால் அடிபடும்போது அந்த ஹெல்மெட்டே நமது தலையைப் பதம் பார்க்கலாம்.


சதுரம், கூம்பு வடிவம் என டிசைனர் ஹெல்மெட்களைத் தவிர்க்க வேண்டும்.

ஹெல்மெட் ரவுண்டாக இருந்தால் மட்டுமே விபத்தில் பாதிப்பு குறைவாக இருக்கும்."

எப்படி அணிய வேண்டும்? "ஹெல்மெட் போட்டும் நாடி நாடாவைப் போடாமல் இருப்பது ஹெல்மெட்டை நழுவவிடச் செய்யும்.

ஆக, ஒரு விரல் அல்லது இரண்டு விரல் மட்டும் செல்லக்கூடிய இடைவெளியில் நாடாவை அணிந்துகொள்வது நல்லது. அதன் லாக்கும் சுலபத்தில் விலகி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.'

"சிறந்த தலைக்கவசம் அணிவோம்.. தலைசிறந்த பாதுகாப்பு பெறுவோம்..



# அனுபவமும் அவமானமும்

நெருக்கமானவர்களிடம் நாம் நம்பிச் சொன்ன வார்த்தைகளை, மூன்றாம் மனிதர் வாயால் கேட்கையில் அவமானப்படுகிறது நம் "நம்பிக்கை".

அவமானத்தை அனுபவமாக எடுத்துக்கொள்ளுங்கள், அவமானப் படுத்த ஒருவர் இல்லையென்றால் நமக்குத் தன்மானம் என்ற ஒன்று தெரிந்திருக்காது.

பேசிவிட்டு யோசிப்பதை விட யோசித்துவிட்டுப்பேசுங்கள்.

வாழ்க்கையில் ஏற்படும் அநாவசியமான அத்தனை பிரச்சினைகளுக்கும் முற்றுப் புள்ளியாய் அது அமையும்.

எதைச் சொல்லி உன்னை அசிங்கப்படுத்த நினைக்கின்றானோ, அதையே உன் ஆயுதமாக்கு.

மாஸ்டராகவும், குழந்தையாகவும் சரிசமமாக இருப்பதில், சமநிலை பேணுபவருக்கே வெற்றி கிடைக்கின்றது. சிந்திக்க வேண்டிய கருத்து:

நாம் என்ன பேசிக்கொண்டிருக்கின்றோம்

என்பதைப் பற்றி, நமக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், நாம் அரிதாகவே அறிவுரை வழங்குகின்றோம். ஆனால் நாம் ஒரு கருத்தை தெரிவிக்கும்போது, மற்றவர் அதைச் செயல்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

அவர்கள் அதைச் செயல்படுத்த முடிவெடுக்காதபோது, பெரும்பாலும், நாம் அவற்றை விமர்சனமாக கருதுகின்றோம் அல்லது அவர்கள் நம்மை நம்பவில்லை என புரிந்துக் கொள்கின்றோம்.

நான் மாஸ்டராகவும், குழந்தையாகவும் இருப்பதில் முழுமையான சமநிலை பேணுவது அவசியம்.

ஒரு மாஸ்டராக, என்னால் மற்றவர்களுக்கு அறிவுரை வழங்க முடிகின்றது.

ஆனால்,

நான் அறிவுரையைப் பெறும்போது, குழந்தையாக இருக்கும் உணர்வை பேணுவது அவசியமாகும்.

அதாவது, புண்படாமல், மற்றவர்களின் கருத்தையும் விமர்சனத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகும்.






**வணக்கம்** எப்படி இருக்கீங்க பார்த்து ஒரு மாசம் ஆச்சு அதுக்குள்ள என்ன என்ன ஆகிப்போச்சு என்று சொல்லியபடி உள்ளே வந்தார் கபாலிகான். சூடாக கொடுத்த வேர்கடலையை ஒவ்வொன்றாக கொறித்துக் கொண்டே பேச ஆரம்பித்தார் கபாலிகான்.

சூடாவும் சுவையாக இருக்கு வேர்கடலை அரசியல் மாதிரி என்றவர், பொதுக்குழு கூட்டத்துக்கு பின்பு எடப்பாடி பேசிய பேச்சு தொண்டர்களுக்கு உற்சாகத்தை கொடுத்திருக்கிறது.

***அப்படியா?***

ஆமாம். பி.ஜே.பி.யோடு கூட்டணி இல்லை என்று சொன்ன பின்பும் வேண்டுமென்றே தங்கள் கட்சியை பிஜேபியோடு மறைமுக உடன்படிக்கை வைத்திருப்பதாக சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுக்கும் விதமாக எடப்பாடி பேசினார். அப்படி பேசும்போது அவர் வைத்த வாதம் தி.மு.க.வுக்கு செக்மெட்டாக அமைந்து விட்டது




***எதை சொல்றீங்க?***

தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளால் ஏற்பட்ட இழப்புக்கு ஒன்றிய அரசு நிவாரண உதவி வழங்கவில்லை என்று சொல்லி மக்களிடையே அதை கொண்டு சென்று ஸ்கோர் பண்ணலாம் என்று நினைத்த தி.மு.க.விற்கு சங்கடமாக போய்விட்டது எடப்பாடி பேச்சு.

***ஓஹோ!***

கேட்டவுடனே நிதி கொடுக்க ஏடிஎம் மிஷினா என்று பிஜேபியில் கேட்க அதற்கு அமைச்சர் உதயநிதி இவங்க அப்பன் வீட்டு பணத்தையா கேக்குறோம்





என்று கேட்க இது என்ன பாஷை அப்பன், ஆத்தா ன்னு நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கேட்க பிரச்சனைகள் தி.மு.க.வுக்கும் பி.ஜே.பிக்கும் இடையில் ஓடிக்கொண்டிருக்கும் போது திடீரென எடப்பாடி பொதுக்குழுவில் பேசும் போது சொன்ன வாசகம் திசை திருப்பி விட்டது!

**என்ன சொன்னார்?**

அட பிஜேபி மட்டும் இல்லைங்க மத்தியில யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ்நாட்ட கவனிக்க மாட்டாங்க நம்ம மாநிலத்தில் நம்ம தான் பாத்துக்கணும் பி.ஜே.பி காங்கிரஸ் வித்தியாசம் கிடையாது என்று சொல்லி அந்த பந்தை அப்படியே திருப்பி விட்டார்.

இதற்கு பதில் சொன்ன தி.மு.க பி.ஜே.பியை எடப்பாடி கண்டிக்கவில்லை பொதுவாக பேசுகிறார் பாருங்கள் என்று திசைதிருப்ப நினைத்தது. அதே நாளில் ஓபிஎஸ் வீசிய பந்தால் பரபரப்பானது!

**அவர் என்ன சொன்னார்?**

பொதுக்குழுவில் என்னை பார்த்து இபிஎஸ் துரோகி என்று சொல்லுகிறார். நான் உண்மையை பேச ஆரம்பித்தால் இபிஎஸ் திகார் சிறைக்கு செல்ல வேண்டி இருக்கும்! என்றார்.

இபிஎஸ் அலட்டிக் கொள்ளாமல் சொல்லுங்க !சொல்லி பாருங்க !ஜெயிலுக்கு போக போறது நீங்கதானே இன்று எதிர் பந்து வீசினார். இப்படி பேசிக் கொண்டே இருக்கும் போது தமிழ்நாட்டை கலக்கிய சம்பவம் விஜயகாந்த் மரணம் ஆகையால் தற்காலிகமாக பரபரப்பு தள்ளி வைக்கப்பட்டுள்ளது ஆனாலும் மீடியாக்கள் ஏதேனும் ஒரு விதத்தில் மீண்டும் இதை கிளப்பி பரபரப்புக்கு பஞ்சம் இல்லாமல் பார்த்துக் கொள்வார்கள். அடுத்த மாதம் சந்திப்போம் வரட்டுமா ஹாப்பி நியூ இயர் என்று சொல்லிக் கொண்டே கிளம்பினார் கபாலிகான்...

# EDUCATION IS LIFE

**" Education is a social process…**

**Education is growth..**

**Education is not preparation for Life…**

**Education is LIFE ITSELF….!**

The real aim of education is to ensure all-round child development and growth of individual. Given a platform to talk about today's children, we have voices commenting on every single thread of the fabric, calling them as E-Generation. The teaching learning process is undergoing revolutionary changes. Teacher plays a vital role in shaping the personality of this E-generation in the right path. These Children are the torch bearers of DREAM INDIA.

In God's creation children are the most beautiful and wonderful said a poet. Every child has a lot of potential in him. The education system, the methodology and the educator have to

bring the best in the child. Schools are the institutions where the child is oriented to systematic learning. Every teacher is equipped with his/her own techniques to faster the learning of the pupils.

Education is the process of drawing out the potentials of the human mind. School education is the stage at which a young mind bubbles with all enthusiasm, curiosity and fun. Obviously, the Primary stage is the fulcrum around which the fabric of educational activities is to be woven.

The world today is under the sway of materialistic onslaught and degradation of moral values due to which it is facing an all-round turmoil. It is the prime duty of the teachers to inculcate value-based education, specifically dealing with human values that would redesign the fabric of our educational




system. Values help a person to better the quality of life. Values form the basis of character formation and personality development. Values are caught never taught. The teacher is required to integrate the concept of values in their respective, regular curriculum by drawing out analogies to highlight the values.

Innovation and improvisation are the need of the hour. With the invasion of electronic media classroom teaching has to be activity oriented to retain the interest of the students and prevent them from boredom. Student- centred education is the order of the day. The entire ambit of teaching techniques should focus on the development of the child through effective socialization, pertinent exposure of the child's inner capabilities and



outburst of effective domain. Such an experience is the Sine Qua Non (Indispensable) of magnetic teaching. Learning that is achieved through exploration, together with the inculcation of values gives the children a good stand who would build up a society and the world at large, men of rational thinking with a humanistic approach.

To make teaching learning process effective, it should be ensured that teachers acquire a higher order of teaching- learning, critical thinking, problem solving and creative skills by harnessing the power of integrated technologies and methodologies. An inspiring teacher becomes a true leader. A Leader is one who inspires a follower, accomplishes work, develops the follower, shows how to learn, assumes obligations

and overcome various obstacles in attaining the goal. Leadership is lifting a person's performance to a higher standard; the building of a personality beyond is normal limitation. Leadership is the process of influencing the behaviour of others towards the accomplishment of goals in a given situation. A good has the ability to communicate, is loyal, selfless, problem 5 solving, openness to change and has a distant vision.

The path of a teacher is shifted from the role of knowledge transmitter to facilitator in a classroom. A teacher is not sage on the stage, but a guide in the sides. We should never forget once we become a teacher, that the purpose for which a man lives is the improvement o man himself, so that he may go out of this world having, in his great sphere or his small one, done some little good for his fellowmen and laboured a little to enlighten a little.

SCHOOLS should focus on value education which is the need of the hour.

"Valuables are priced but values are priceless."



**Dr.R. RAJAMMAL,** M.A.,M.Ed, PGDGC,D.Let.
National Awardee Educationist,
Woman Achiever & Social Ambassador.



# LET BE MORE CAREFUL!

Everyone is advised to wear a mask because the new COVID-Omicron XBB variant of the coronavirus is different, deadly and not easy to detect properly:-

Symptoms of the new virus COVID-Omicron XBB are as follows:-

1. No cough.
2. No fever. There will just be a lot :-
3. Joint pain.
4. Headache.
5. Neck pain.
6. Upper back pain.
7. Pneumonia.
8. Generally no appetite.



Ofcourse, COVID-Omicron XBB is 5 times more virulent and has a higher death rate than the Delta variant. The condition takes a shorter time to reach extreme severity, sometimes without obvious symptoms.

Let's be more careful!


This type of virus does not reside in the nasopharyngeal area and directly affects the lungs, namely the "window", in a relatively short time. Several patients diagnosed with Covid Omicron XBB were finally classified as having no fever, no pain, but X-ray results showed mild chest pneumonia.

Nasal swab tests frequently provide negative results for COVID-Omicron XBB, and cases of nasopharyngeal tests providing false negative results are increasing.

This means that the virus can spread in the community and directly infect the lungs, causing viral pneumonia which can cause acute respiratory stress.

This explains why Covid-Omicron XBB is very contagious, very virulent and deadly.

Please note, avoid crowded places, keep a distance of 1.5 m even in open spaces, wear a two-layer mask, use a suitable mask, and wash your hands frequently if everyone is asymptomatic (not coughing or sneezing). Covid Omicron "WAVE" is more deadly than the first wave of Covid-19. So we have to be very careful and take all kinds of coronavirus precautions.



எஸ்.ஜானகி

Also maintain vigilant communication with your friends and family.

# ஆர்வம் இருந்தால் எந்த கலையும் கைகூடும்

நம்முடைய முன்னோர்கள் எல்லா கலையையும் அறிந்து வைத்திருந்தார்கள். எனக்கு எந்த அனுபவமும் இல்லை என்று சொன்ன காலத்தில் அனுபவத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால் "கண் பார்த்தா கை வேலை செய்யப் போகிறது"என்ற சொல்லாடலை கிராமத்தில் பெரியவர்கள் பயன்படுத்துவார்கள். அதைப்போல எந்த ஒரு செயலையும் அதை அறிந்து கொள்வதிலும் தெரிந்து கொள்வதிலும் செயல்படுத்துவதிலும் ஆர்வம் இருந்தால் மட்டுமே அந்த செயலை நாம் செயல்படுத்த முடியும்.

சீன தேசத்தில் ஒரு அரசர். வித்யாசமான பேர்வழி. மாமிச உணவின் ரசிகர். அதிலும் ஆட்டு மாமிசம் மனிதருக்கு மிகமிக இஷ்டம். அவரே தினம்தோறும் ஆட்டைத் தேர்ந்தெடுப்பார். அவர் எதிரிலேயே அந்த ஆடு வெட்டப்படும். அந்த ஆட்டை வெட்டுகிறவரும் ஒரே நபர்.

தினம்தோறும் அரண்மனைக்கு வருவார். அரசர் தேர்ந்தெடுத்த ஆட்டை ஒரே வெட்டில் கோடாரியால் வெட்டி விடுவார். தலை வேறு, உடல் வேறாகிவிடும். எந்த ஆட்டையும் அவர் அரைகுறையாக வெட்டி மறுமுறை வெட்டியதாக வழக்கமே இல்லை.

அரசருக்கு ஒரே ஆச்சரியம். "இந்த கோடாரியைத் தினம்தோறும் சாணை பிடிப்பாயா" என்று கேட்டார். "இல்லை... சரியாக வெட்டுகிற பாணியில் வெட்டினால் கூர் மங்காது" என்றார்.

"அது என்ன சரியான பாணி" என்றார் அரசர். முதல் நாள் இடது கைப் பக்கமாகச் சரித்துக் கொண்டு வெட்டுவேன். அடுத்த நாள் வலது கைப் பக்கமாகச் சரித்துக் கொண்டு வெட்டுவேன்.

இப்படி மாறிமாறி வெட்டுவதால் இருபக்கமும் சமமான கூர்மையுடன் இருக்கும்.

அதுமட்டுமல்ல வெட்டுகிறபோது கொடுக்கிற அழுத்தம் ஒரே மாதிரியாக இருக்கும். மாறாது. அதனால் இடது, வலது என்று மாறி மாறி வெட்டினால் கூர் தீட்டப்பட்ட மாதிரி ஆகிவிடும்" என்றார் ஆட்டை வெட்டுபவர். "இந்தக் கலையைக் கற்றுத் தர முடியுமா" என்று கேட்டார் அரசர்.

"மகாராஜா அதுமட்டும் என்னால் முடியாது. காரணம் எனக்கு யாரும் இதைக் கற்றுத் தரவில்லை. என் தாத்தா வெட்டும்போது தள்ளி நின்று பார்த்தேன்.

என் தகப்பனார் வெட்டும்போது அருகில் நின்று கவனித்தேன். அவர்கள் யாரும் எனக்கு எதையும் சொல்லித் தரவில்லை. எந்தக் கலையுமே ஒருவர் மனசிலிருந்து அடுத்தவர் மனசுக்கு வருவது. இதை உள்வாங்கிக் கொள்ளலாமே ஒழிய சொல்லித் தந்துவிட முடியாது" என்றார் ஆட்டை வெட்டுபவர்.

*கண்ணையும் காதையும் கருத்தாகத் திறந்து வைத்துக் கொண்டு உள்வாங்கப் பழகுங்கள். எந்த கலையும் கைகூடும்!



# நீங்கள் வாங்கி போட்ட இடம் பத்திரமாக இருக்கிறதா?

அரசு பணியில் இருக்கும் போது எங்கேயாவது ஒரு இடத்தில் நகருக்கு வெளியே இடம் வாங்கி வைத்திருப்பீர்கள் அந்த இடத்தை போய் 20 வருடம் ஆனாலும் பார்க்காதவர்கள் இன்றைக்கும் உண்டு அந்த இடம் அப்படியே இருக்கிறதா யாராவது ஆக்கிரமித்து இருக்கிறார்களா என்பதை அடிக்கடி போய் பார்த்து வர வேண்டும் அப்படி வர முடியாவிட்டால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அந்த இடம் வேறொருவர் பயன்பாட்டில் இருக்கும். அந்த சமயத்தில் நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

இடம் சமந்தமாக, உள்ளாட்சி வருவாய், மின்சாரம், குடிநீர், சாலை, அங்கீகாரம் போன்ற துறைகளில் எதிரி எதனையும் செயல்படுத்த கூடாது என்று ஆட்சேபனை கடிதம், பதிவுதபாலில் அனுப்பபட வேண்டும்.

எதிர் தரப்பினரிடையே இருக்கும் , அல்லது அவர்கள் கூறும் அனைத்து ஆவணங்களையும் , சார்பதிவகம், இணையதளம், சம்பந்தப்பட்ட அரசு அலுவலகம் போன்ற இடங்களுக்கு சென்று அந்த ஆவணங்களின் நகல்களை கைப்பற்றுதல் வேண்டும்.

எதிர் தரப்பினர் ஆவணங்களை கூர்ந்து படித்து, எங்கு அவர்கள் ஆவணங்களை திருத்தியோ (அ) நேர் செய்தோ, உருவாக்கி இருக்கிறார்கள் என்பதை கண்டுபிடிக்க வேண்டும்.

நீதி மன்றத்தில் சிவில் வழக்கு போடலாம். அதன் மூலம் தீர்வுகளை பெற்று கொள்ளலாம்.

உங்கள்நிலம் எந்தெந்த காரணங்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன?

நிலத்தை விட்டு நீங்கள் வெகுதூரம் இருக்கும் பொழுது, அதாவது வெளியூர், வெளி மாநிலம், வெளி நாட்டில் வாசிக்கும் பொழுது. நிலத்திற்கு தேவையான ஆவணங்களை ஒழுங்காக பாரமரிக்கமால் இருக்கும் பொழுது. நிலங்களை அடிக்கடி பார்வையிடாமல் இருக்கும் பொழுது. பத்திரங்களை தொலைத்தவர்களுடைய இடங்கள்.

ஒரே இடத்திற்கு டபுள் டாகுமென்ட் இருப்பவர்களுடைய இடங்கள். தவறான நபர்கள் இடங்களை பாரமரிக்க நியமிப்பதால். இடத்தில் வாடகைக்கு தரமற்றவர்களை குடிவைக்கும் பொழுது.

இடத்தின் விலை அதிகமாய் விட்ட பிறகு உங்களுடைய பத்திரத்தின் நகல்கள் ஊரெல்லாம் சுத்திவரும் போது. எல்லைகள் சரியாக அளக்காமல் விட்ட நிலங்கள்.

கூட்டு பட்டாவில் இருக்கும் நிலங்கள், நீளம், அகலம், குறிப்பிடாமல் இருக்கும் கிரைய பத்திரங்கள் உள்ள நிலங்கள். காணிகல், “L” கட், பெண்சிங் போன்றவை செய்யப்படாமல் இருக்கும் நிலங்கள்.

Static Asset, களை Dynamic Asset ஆக மாற்றாமல் இருப்பது போன்ற காரணகளால் உங்கள் நிலம் ஆக்கிரமிக்கபடுகின்றன.

– பி.முத்துராஜ்



மித்ரா
கிட்சன்

# புத்தாண்டு ஸ்பெஷல்
# COCONUT MILK GLASS HALWA



**தேவையான பொருட்கள்:** தேங்காய் -1, சர்க்கரை - 300 கிராம், மைதா - 250 கிராம், தேங்காய் எண்ணெய் - 100 கிராம், பாதாம் - 100 கிராம்.

**செய்முறை:** முதலில் ஒரு கிண்ணத்தில் 250 கிராம் மைதாவுடன் தண்ணீர் சேர்த்து சப்பாத்தி மாவு பதத்திற்கு பிசைந்து வைத்துக் கொள்ளவும். பிறகு அதை ஒரு 6 மணி நேரம் தண்ணீர் ஊற்றி ஊற வைக்கவும். பிறகு 6 மணி நேரம் கழித்து அந்த மைதாவை தண்ணீரில் வைத்து நன்கு பிசையவும் . அந்த மைதாவில் இருந்து மைதா பால் கிடைக்கும். பிறகு அதை வடிகட்டிக் கொள்ளவும். அதன் பின்பு அந்த மைதா பாலை 8 மணி நேரம் அப்படியே வைக்கவும் .8 மணி நேரம் கழித்து அதன் மேல் தங்கி இருக்கும் தண்ணீரை எடுத்து விடவும். பிறகு அடியில் மைதா பால் தங்கி இருக்கும். அதன் பிறகு ஒரு தேங்காயை உடைத்து அதிலிருந்து பால் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். பிறகு மைதா பால் தேங்காய் பால் இரண்டையும் ஒன்றாக கலக்கவும் பிறகு இதில் சர்க்கரையை சேர்த்து அடுப்பில் வைத்து நன்றாக கலக்கவும் 20 நிமிடம் அப்படியே கலக்கி விடவும் 20 நிமிடம் கழித்து தேங்காய் எண்ணெயை ஊற்றி நன்றாக கலக்கவும் அதன் பிறகு அல்வா பதம் வந்தவுடன் பாதாம் துண்டுகளை சேர்த்து நன்றாக கலக்கவும் பிறகு ஒரு ஜிஸிகிசீ தட்டில் ஊற்றி வைக்கவும் 5 மணி நேரம் கழித்து எடுத்து கட் செய்யவும் இப்பொழுது சுவையான, சூப்பரான, அட்டகாசமான, கண்ணாடி போன்ற Glass அல்வா ரெடி.

தேங்காய் பாலில் இருக்கும் நன்மைகள் தேங்காய் பால் உடல் வலிமைக்கு நல்லது. அதிக அமிலம் காரணமாக ஏற்படும் வயிற்று புண்களை குணமாக்க பயன்படுகிறது குழந்தைகளுக்கு தேவையான எல்லா சத்துக்களும் தேங்காய் பாலில் அடங்கியுள்ளன.



S.கவிதா
சிட்லபாக்கம்

## மலேசியா அஜித் மற்றும் கவிதா பங்குபெறும் மாபெரும் இசை நிகழ்ச்சி!



வரும் 5.1.2024 வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை கவிக்குயில்கள் நடத்தும் திரைஇசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக

**பீப்புள் ஸ்டார் எம் .எஸ் மூர்த்தி**

அவர்கள் பங்கேற்கிறார். மதுரவாயல் ஆலப்பாக்கம் 49 ஏ ஸ்ரீ கிருஷ்ணா நகர் ராக்கிங் ஸ்டுடியோவில் நடைபெற உள்ள இந்த கச்சேரியை மலேசியாவைச் சேர்ந்த திரு.அஜித், இந்தியாவைச் சேர்ந்த திருமதி கவிதா ஆகியோர் தலைமை ஏற்று நடத்துகின்றனர். சிறப்பு தொகுப்பாளர்களாக மலேசியா துளசிங்கம், சென்னை ராகுல் ஆகியோர் சிறப்பாக வழங்க இருக்கிறார்கள்.





தொடர்
23

## நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

# வேதனை தீருமோ!

இன்றைய நடுவன் அரசு மத்தியில் கூட்டாச்சி என்ற தத்துவத்தை ஏற்றுக் கொள்வதாக இல்லை!

கூட்டாச்சி நடக்கும் ஒரு ஜனநாயக நாட்டில் எதிர் கட்சியினர் வென்று ஒரு மாநிலத்திற்கு ஆட்சிக்கு வந்தால் இந்திய அரசியல் சாசனத்தை மதிக்காத கவர்னர்களை அங்கு நியமித்து அந்த மாநில மக்கள் கல்வி, பண்பாடு போன்றவைகளின் முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பது நியாயம் இல்லை!

ஒன்றிய அரசின் பிரதமர் பொறுப்புக்கு வருபவர், நடு நிலையோடு எல்லா மாநில மக்களையும் சமமாக மதித்து செயல் படும் பொழுது தான், இந்தியா மிக பெரிய ஜனநாயக நாடு என்று உலகமே போற்றும்!



கடந்த சில வருடங்களாக மதம், மற்றும் மொழி விஷயங்களில் நடுவன் அரசு ஒரு தலைப் பட்சமாக நடந்து கொள்வதாக பல மாநில மக்கள் மத்தியில் ஒரு வருத்தம் இருந்து வருவதை நடு நிலையோடு சிந்திக்கத் தெரிந்தவர்கள் உணர் வார்கள்!

இந்த நேரத்தில் தமிழ் நாட்டில் மிக் ஜாம் புயல் வந்து கூடவே தொடர்ந்து இரவு பகலாக பல மணி நேரம் கொட்டிய தொடர் மழையால் சென்னை மக்கள் பலரை சோற்றுக்கு வழி இல்லாமல் குழந்தைகளோடு நடுத் தெருவில் அனாதையாக நிற்க வைத்து விட்டது. புயலாலும், கடல் சீற்றத்தாலும், வெள்ளத்தாலும், ஏரித் தண்ணீர் பாம்புகள், சாக்கடைத் தண்ணீரோடு வீடுகளுக்குள் புகுந்து புற நகர் பகுதிகளை நாசம் செய்து விட்டது!

தமிழ்நாடு முதல்வரிலிருந்து அமைச்சர்களும், அனைத்து துறை அதிகாரிகளையும், ஊழியர்களும் பாதிக்கப் பட்ட பகுதிகளில் மக்கள் மத்தியில் நின்று அவர்களுக்கு உதவி செய்யும் வேலைகளில் ஈடு பட்டுக் கொண்டிருந்தார்கள்!

மாநில அரசுக்கு ஏற்கனவே நிதி பற்றாக் குறை இருக்கும் பொழுது நடுவன் அரசு இதற்கெல்லாம் கூடவா உதவி செய்யாமல் போய் விடுவார்களா என்ற எண்ணத்தில் தமிழ் நாடு முதல்வரிலிருந்து கடை நிலை ஊழியர்கள் வரை களத்தில் இறங்கி நிவாரண பணியில் ஈடு பட்டுக் கொண்டிருந்தார்கள்!

புயல், தொடர் மழை, கடும் வெள்ளம் ஆகியவற்றால் சென்னை புற நகர் பகுதிகள் அனைத்தும் பாதிக்கப் பட்டு குழந்தைகள், வயசான முதியவர்கள் அனைவரும் சோறு. தண்ணீர் இல்லாமல் வீட்டிற்குள் தேங்கி கிடக்கும் தண்ணீரில் நின்று கொண்டிருப்பதை மாநில அரசு பிரதமர் கவனத்திற்கு கொண்டு போனார். முதல் தவணையாக 2000 கோடியாவது நிவாராண நிதியாக அனுப்புவார். அல்லது இந்தியப் பிரதமரே விமானத்தில் தமிழ் நாட்டிற்கு பறந்து வருவார் என்று எதிர் பார்த்தார்!



துடுப்பதி ரகுநாதன்

இது போல் குஜராத்தில் மழை வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்ட பொழுது பிரதமர் உடனே குஜராத்திற்குப் பறந்து சென்று, நேரில் பார்த்து விட்டு உடனே அவர்களுக்கு 1000 கோடி ரூபாயை முதல் கட்டமாக நிவாரண நிதியாக வழங்கினார்.

தமிழ் நாட்டில் இது வரை பல புயல்கள் தாக்கியிருக்கின்றன. நமது பிரதமர் ஒரு முறை கூட இங்கு வர வில்லை! போதிய நிவாரண நிதியும் வழங்கவில்லை!

முதல் கட்டமாக 2000 கோடி நிவாரண நிதி தேவை என்று கேட்கும் பொழுது பழைய கணக்கில் தமிழ் நாட்டிற்கு வர வேண்டிய கணக்கில் 400 கோடி அனுப்பி விட்டு அது தான் நிவாரண நிதி என்று சொல்கிறார்கள்!

இந்த இக்கட்டான நிலையில் நெல்லை, தூத்துகுடி, தென்காசி, குமரி என்ற நான்கு மாவட்டங்களிலும் 70 ஆண்டுகளாக மக்கள் காணாத தொடர் மழை பெய்து ஏரி குளங்கள் எல்லாம் உடைந்து மக்கள் வசிக்கும் வீடுகளில் எல்லாம் இடுப்பளவு தண்ணீர் நிற்க, எல்லா ஊர்களும் தனித் தனி தீவுகளாக மாற்றப் பட்ட கொடுமையும் தமிழ் நாடு சந்திக்க நேர்ந்தது!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தர வந்த ஒன்றிய நிதி அமைச்சர், தமிழ் நாடு கட்சி அரசியல்வாதிகளை தாக்குவதற்கும், கோயில் உண்டியலில் பணத்தை போடாதீர்கள்! அதை கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுங்கள் என்று மத அரசியல் பேசுவதற்குமா பயன் படுத்துவது?

இந்தியாவிலேயே அதிக ஜி.எஸ்.டி. வரி கட்டுபவர்கள தமிழர்கள் தான்! தமிழர்கள் கட்டும் வரிப் பணத்தில் அவர்கள் கட்டிய பணத்தில் ஒரு கணிசமான தொகையையாவது வழங்க நிதி அமைச்சர் அங்கு வந்திருப்பார்கள் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஒன்றிய அரசின் பொறுப்புக்கு வருபவர்கள் எந்த கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட்டாச்சித் தத்துவத்தை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்!

மொழி, இன. மத வேற்றுமைகளை புறம் தள்ளி விட்டு, இந்திய மக்கள் எல்லோரும் சமம் என்று கருதும் பண்புள்ளவர்களாக அந்த அரசியல் தலைவர்கள் இருக்க வேண்டும்!

அப்படிப்பட்டவர்களை தேர்ந்து எடுக்கும் மிக பெரிய பொறுப்பு வாக்காளர்களிடம் இருக்கிறது!

தற்பொழுது வெள்ளம் வடிந்து கொண்டிருக்கிறது! இந்திய மக்களின் வேதனை என்று வடியுமோ?...

# இயற்கை சூழல் மீட்பு

முனைவர். பா. ராம் மனோகர்

மனித இன நாகரீகம் நீர் ஆதாரங்களை ஒட்டியே உருவாகியதாக, நாம் முன்னரே அறிந்திருந்தாலும், அறிவியல், துறை தொழில் நுட்பம் வளர்ச்சி காரணமாக, நகரங்கள், பெரு மாநகரங்கள் கடந்த 50 ஆண்டுகளில் உலகெங்கும் உள்ள நாடுகளில் அமைந்துள்ளன மனித குலத்திற்கு ஒரு புறம் சாதனை என்று கூறலாம். பூமியில் 1% மட்டும் நகரங்கள் ஆக இருந்தாலும், அவற்றில் உலகின் 50% மக்கள் வசித்து வருகின்றனர்., இரும்பு, காண்கிரீட், போன்றவற்றால் ஆன கட்டிடக் காடுகள், மக்கள் கூட்டம், போக்குவரத்து நெரிசல், ஆகிய முக்கிய பண்புகள் கொண்ட நகரங்களில், செயற்கை அமைப்பு வசதிகளால் மட்டுமின்றி, அங்குள்ள இயற்கை சூழல் மட்டுமே மக்கள் ஆரோக்கியமாக வாழ , வாழ்க்கைத் தரம் உயர்த்தும் காரணியாக விளங்குகிறது எனில், அது மிகையாகாது. ஆனால் இயற்கை சூழல் மாற்றங்களால், மக்கள் தொகை பெருக்கத்தாலும், நகரங்கள் சமீப காலமாக "வெப்ப தீவுகள் "ஆக மாறிவருகின்றன. அவற்றை நல்ல முறையில் பாதுகாக்க, இயற்கை தந்த கொடைகள் தாம் நன்னீர் ஏரிகள், சிறு காடு, கடற்கரை, ஆகியவை ஆகும்.



நாகரீகம் வளர்ச்சி பெறுவதாலும், வேலை வாய்ப்பு கல்வி போன்ற காரணங்களால், நகரங்கள் திட்டமிடப்படாத விரிவாக்கம் அடைகிறது. அவ்வாறு ஏற்படும் நகரமயம் ஆகும் நிலை, இயற்கை பகுதிகளில் அழிவு உண்டாக்கி விட்ட, அவலம், வேதனை நாம் உணர்ந்து வருகிறோம்! உலக அளவில் தொடர்ந்து வரும் இந்த அபாய, அபரிமித நகரங்களின் இயற்கை அழிவின் தாக்கம் குறைத்து மீட்பு செய்ய ஐக்கிய நாடுகளின் சுற்றுசூழல் அமைப்பு (UNEP) ஒரு திட்டம் உருவாக்கியது. ஐக்கிய நாடுகளின் சுற்றுசூழல் அமைப்பு மீட்பு பத்தாண்டு கால திட்டத்தின் ஒரு பகுதியாக உலகில் உள்ள 19 நகரங்களை இயற்கை சூழல் மீட்பு செய்து அவற்றை பசுமையானவையாக மாற்றம் செய்யும் திட்டத்தினை 2023-25 ஆம் ஆண்டு துவங்கியது.

இந்த முக்கியமான திட்டம் 1. நகரங்களில் உள்ள அரசு, தனியார் மற்றும் தொண்டு நிறுவனம் அமைப்புகளை இயற்கை சார்ந்த செயல்பாடுகளில் அதிக முதலீடு செய்து நல்ல, வேலை வாய்ப்புகள் உருவாக்க, குறிக்கோள் கொண்டிருத்தல்.

2. நகர வாழ் மக்கள் உயிரின வேற்றுமை மற்றும் பருவ கால மாற்றம் தொடர்பான செயல் திட்டங்கள் உருவாக்குவது மட்டுமின்றி, நிதி மற்றும் வேலை தொடர்பு உள்ள பணிகள் மேற்கொள்ள அவர்களின் ஆர்வத்தினை தூண்டும் குறிக்கோள், ஆகிய இரண்டு நோக்கங்களைமையமாக கொண்டு திட்டம் வகுக்கப்பட்டது.இந்த திட்டம் முதலில் 8 வெவ்வேறு நகரங்களில் நகரப்பகுதிகளில் அமைந்துள்ள இயற்கை சூழல், காடுகள் நீர் நிலைகள் ஆகியவற்றை மீட்பு செய்து மேம்பாடு செய்ய முடிவு செய்தது. ஈக்குவடார் நாட்டில் உள்ள சம்போராந்தான் நகரின் அருகில் உள்ள அலையாத்தி காடுகளை உள்ளூர் மக்கள் பங்கேற்புடன் மீட்க செயல்பட்டனர். செனேகல் நாட்டில் டக்கர் பீடபூமி பசுமையாக்கம், பிலிப்பைன்ஸ் நாட்டில், மகரந்த சேர்க்கை ஊக்குவிக்க மலர்கள், பசுமை பரப்புகள் ஆகியவற்றை குஸ்யோனின் நகரத்திலும்உருவாக்க முனைந்தனர். பங்களாதேஷ் நாட்டில் சிராஜ்கஞ் நகரத்தில் ஆற்றோரத்தில் பசுமை பரப்புகள் ஏற்படுத்தும் நோக்கம் கொண்டும், ஈக்குவடார் நாட்டின் மற்றொரு நகரத்தில் அயல் தாவர சிற்றினங்கள் அழிப்பு, உள்ளூர் அலையாத்தி காடுகளை பாபாஹயோ ஆற்று கரையில் உருவாக்க செயல்பட திட்டம் மேற்கொள்ளப் பட்டது.

இதே போல் மெக்ஸிக்கோ, அமேசான் நகரங்களில், சீரிய இயற்கை சார் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டது. இந்தியாவில் கேரளா மாநிலத்தில் கொச்சி நகரத்தில் உள்ள வேம்பநாடு ஏரி மீட்கவும் இந்த பன்னாட்டு இயற்கை மீட்பு (ஹிழிணிறி) திட்டம் செயல்பட நம் அரசு துறை மற்றும் மாநில அரசுகள் செயல்பட துவங்கியுள்ளனர்.

இந்த பாரம்பரிய ஏரி அழகிய கழிமுக பகுதி, அலையாத்தி காடுகள் கொண்டும், நம் நாட்டின் சிறப்பு பெற்ற சுற்றுலா தலம் ஆக விளங்குகிறது. ஆனால் மக்கள் தொகை பெருக்கத்தால் நீர் மாசு அதிகம் ஆகி சூழல் சீர் கேடு ஆகிவிட்டது. இதன் மீட்பு ஒரு முக்கிய முயற்சி ஆகும். UNEP என்ற பன்னாட்டு, ஐக்கிய நாடு சபையின் சுற்று சூழல் நிறுவனம், மேலும் 11 உலக நகரங்களை சிறப்பு பெற்ற மாதிரி எடுத்துக்காட்டு (Role model Cities) நகரங்களாக மாற்றம் செய்ய திட்டம் வகுத்திருக்கிறது.

தென் ஆப்பிரிக்க கேப் டவுன் நகரில், ஈர நிலம், கடற்கரை மணல் பகுதி, பாதுகாப்பு மற்றும் அந்நிய களை தாவரங்கள் அழிப்பு போன்ற செயல்கள் மேற்கொள்ளப்பட்டது. பிலிப்பைன்ஸ் நாட்டின் இல்லாலோ நகரம், ஜப்பானில் கனசாய்வா, சீனா நாட்டில் யாங்சான், பிரேசில் நாட்டின் க்யூரிடிபா, கனடாவில் டோராண்டோ, அமெரிக்கா நாட்டின் சீயாட்டில், ஸ்கோட்லண்ட் நாட்டில் கிளாஸ்கோ, துருக்கி நாட்டின் இஸ்தா ன்புல், ப்ரான்ஸ் தலைநகரம் பாரிஸ் மற்றும் கொலம்பியா நாட்டின் பாரன்குயில்லா ஆகிய நகரங்களில் கடற்கரை, ஆறு சூழல் மீட்பு, உயிரின வளம் வேற்றுமை, வன வளம் மீட்பு, நன்னீர் சதுப்பு நிலங்களை சீர் பெற செய்து சுற்று சூழல் சமநிலை பேண பல்வேறு செயல்பாடுகள் மேற்கொள்ளும் திட்டங்கள் தொடருகிறது.

சமீப காலமாக நம் நாட்டிலும், பருவ கால மாற்றம் காரணம் ஆக, மழை, புயல், வெள்ளம் போன்றவை எதிர் பாராத நிலையில், பேரிடர் பிரச்சினைகள் அதிகரித்து வருவது நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான்!எனினும் அரசு துறைகள், திட்டமிட்டு இயற்கை காப்பாற்ற பல்வேறு செயல்பாடுகள் மேற்கொள்ளும் பொழுது அவற்றின் உண்மை நிலை அறிந்து ஒத்துழைப்பு தர வேண்டிய கடமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு.

# பொய் வழக்கிலிருந்து காப்பாற்றும் காஞ்சிபுரம் குப்த லிங்கேஸ்வரர்!

கச்சியம்பதி என்று போற்றப்படும் கவின் மிகு காஞ்சிபுரத்தின் எல்லையில் அமைந்துள்ளது கோயம்பாக்கம் எனும் சிற்றூர் .

பல நூற்றாண்டு பழமைவாய்ந்ததும், சிவ சாநித்யம் நிரம்பியுள்ளதுமான ஓர் அற்புத சந்நிதி இந்த கோயம்பாக்கம் சிவமூர்த்தம். இங்குள்ள ஸ்ரீகாமாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ குப்த லிங்கேஸ்வரர் மறைபொருள் காட்டும் நாதராக அமர்ந்து தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார். குப்தம் என்றால் ரகசியம் என்று பொருள். இங்கு அருள்பாலிக்கும் பெருமான் ஸ்ரீ குப்த லிங்கேஸ்வரர் ரகசியங்களுள் ரகசியமானவர்.



மறைந்த பொருள், மறைக்கப்பட்ட விஷயங்கள் என அனைத்து மர்மங்களையும் வெளிக்கொணர்ந்து ஊர் அறிய சத்தியத்தை நிலை நாட்டுபவர். மெய்ப்பொருளை மறைத்து பொய்யாக வாழும் யாவருக்கும் இச்சந்நிதியில் உண்மை புலப்படும். சிறு விஷயம் முதல் பெரிய விஷயம் வரை இதில் அடக்கம். உதாரணமாக ஒரு பத்திரத்தை மறைத்து வைத்தாலும் இவரிடம் வேண்டினால் அது கிடைத்துவிடும்.

அதேபோல் பெரிய அளவில் உண்மையை மறைத்து, உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் ஒரு வழக்கை பொய்யாக ஜோடித்து மக்களை நம்ப வைக்கும் நிலையில், பாதிக்கப்பபட்டவர்கள் இங்கு வந்து ஈசனை மனம் உருக வேண்டினால் பொய் கலைந்து உண்மை வெளிப்படும் அற்புத ஆலயம். பல நூற்றாண்டு பழமை வாய்ந்த இந்த ஆலயத்தில் ஸ்ரீகுப்த லிங்கேஸ்வருக்கு புதிய ஆலயத்தினை நிர்மாணிக்கும் பொருட்டு ஆலய கட்டுமானப்பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

கோயம்பாக்கம் கிராமம், அய்யம்பேட்டை அஞ்சல், வாலாஜாபாத் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.

காஞ்சிபுரத்தில் இருந்து வாலாஜாபாத் செல்லும் சாலையில் அய்யம்பேட்டையில் இருந்து தெற்கே இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

தொடர்புக்கு: 9894120278, 9445653732

**தகவல்:வில்லிவலம் வீரராகவன்**


## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

**ஆயுள்சந்தா : ரூ.2400.00**

**ஆறாண்டு சந்தா : ரூ.1440.00**

**ஆண்டு சந்தா : ரூ.240.00**

மேலும் விபரங்களுக்கு: **044-23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |

# பாவேந்தர் கண்கொண்டு பாரதியைப் பாருங்கள்! பைந்தமிழ் வளரும்!

உலக மகாகவி பாரதியாரின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மற்றும் அண்ணா பல்கலைக்கழக அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி இணைந்து நடத்திய பாரத மொழிகளின் திருவிழாப் பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரியின் இராமன் கலையரங்கில் 19.12.2023 ஆம் நாள் நடைபெற்ற விழாவில், பயன்பாட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் துறைத்தலைவர் முனைவர் ஜெ. ஜெயப்பிரியா வரவேற்புரை வழங்க, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரிப் புல முதன்மையர் முனைவர் இரா. ஜெயவேல் தலைமையுரையாற்றினார்.

ஒருங்கிணைப்பாளர் தமிழ் இயலன் ச. தனசேகரன் அவர்கள் நோக்கவுரையாற்ற, பொறியியல் தொழில்நுட்பத் தமிழ் வளர்ச்சி மைய இயக்குநர் முனைவர் பா. உமா மகேசுவரி, கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் சு. தணிகையரசு, அண்ணா பல்கலைக்கழகக் கூடுதல் பதிவாளர் முனைவர் ஶ்ரீதரன் மூர்த்தி பாபு ஆகியோர் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

பாரத மொழிகளின் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். அப்போது, "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று முழங்கிய பன்மொழி அறிஞனான பாரதி, தாய்மொழியாம் தமிழ்மொழியின் மீதுகொண்ட தாளாத பற்றாலும், கூரறிவு கொண்டு சங்க இலக்கியங்களை நுழைமாண் நுண்புலத்துடன் ஆழகற்று அறிந்ததாலும்தான் ஞாலம்போற்றும் புரட்சிக்கவிதைகளை இயற்றி உலக மகாகவிஞன் என்று போற்றுமளவு உயர்ந்திருக்கிறார்.

கவிஞர் ஷெல்லி, கவிஞர் வால்ட் விட்மன், கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் போன்ற உலகக் கவிஞர்களின் வரிசையில் முதலாவதாக வைத்துப் போற்றத்தக்க மகாகவிஞனான பாரதியை உலக மகாகவிஞனாக உயர்த்தி பாரறியச் செய்த பெருமை, பாரதிக்குத் தன்னைத் தாசன் என்று அறிவித்துச் செயலாற்றிய பாவேந்தர் பாரதிதாசனையே சாரும். எனவே பாவேந்தரின் கண்கொண்டு பாரதியைப் படித்தால் பைந்தமிழ் வளரும்; உண்மையான பாரதியியலும் மேலோங்கும்" என்று தெரிவித்தார்.

பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், தமிழார்வலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்ற விழாவின் நிறைவில் தமிழ்ப் பயிற்றுநர் முதுமுனைவர் கா. மணிகண்டன் அவர்கள் நன்றியுரை கூறினார். விழாவில் அகரமுதலிப் பதிப்பாசிரியர் திரு. கி.தமிழ்மணி உடனிருந்தார்.

**– அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன்**



# எம் பதில்கள்

**கிளாம்பாக்கம் புது பேருந்து நிலையம் திறக்கப்பட்டுள்ளதே?**

பெருகிவரும் மக்கள் தொகை கேட்ப போக்குவரத்தும் வாகனங்களும் அதிகமாகி வருவதை தடுப்பதற்கு இல்லை. முதலில் கொத்தவால்சாவடி அருகே இருந்த பேருந்து நிலையம் பின்னர் கோயம்பேடுக்கு மாற்றப்பட்டது கோயம்பேடு நெருக்கடி அதிகமானதால் தற்போது தாம்பரத்தை அடுத்த கிளாம்பாக்கத்தில் புதிய பேருந்து நிலையத்தை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் 30 ஆம் தேதி திறந்து வைத்தார்.

2019ல் 400 கோடி ரூபாய் பட்ஜெட்டில் 88 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டது. சிசிடிவி கேமரா, ஜிபிஎஸ் டிராக்கிங், நவீன வசதிகள், மூன்று பாலினத்தவருக்குமான கழிப்பறைகள், பார்வையற்றோர் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்த ஏதுவாக பிரெய்லி எழுத்துகள் என அத்தனை வசதியும் இந்த பேருந்து நிலையத்தில் உள்ளது. இந்த பேருந்து நிலையத்தில் தென் மாவட்டங்களுக்கான பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இங்கிருந்து தென்மாவட்டங்களுக்கு செல்லும் போது பயண நேரம் குறையும்.

இந்த பேருந்து நிலையம் மிகப் பெரிய பயன்களை தரும் என்பதில் சந்தேகமில்லை., ஆனால் அரசு தூய்மையாக வைத்துக் கொண்டாலும் பொதுமக்களும் தூய்மையாக வைத்திருத்தல் அவசியமாகும்.





**மீண்டும் கொரானா என்ற செய்தி அடிக்கடி வந்து கொண்டிருக்கிறதே!**

2019 இல் ஆரம்பித்த கொரோனாவின் தாக்கம் உலகத்தை உலுக்கி எடுத்ததை அனைவரும் அறிவோம். அதன் பிறகு இரண்டாம் முறையும் கொரோனா வந்தது. இனிமேல் அதோடு வாழ பழகிக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் அனைவருக்கும் வந்துவிட்டபடியால் இது எந்த கொரோனா வந்தாலும் மக்கள் அதை பார்த்து அச்சப்படுவார்களா என்று தெரியவில்லை. தற்போது மீண்டும் ஜே .என்.1. வகை கொரோனா ஆரம்பித்து இருக்கிறது. கோவா, மகாராஷ்டிரம், கர்நாடகம், தெலங்கானா, கேரளத்தை தொடர்ந்து தற்போது தமிழகத்திலும் ஜேஎன்1 வகை கரோனா வைரஸ் தொற்று பாதிப்பு உறுதியாகியுள்ளது. கரோனா பரவல் குறித்து மாநில அரசுகளுக்கு பல்வேறுஅறிவுறுத்தல்களை மத்திய சுகாதாரத் துறை வழங்கியுள்ளது.குறிப்பாக, அறிகுறிகள் உள்ள அனைவருக்கும் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளது. அதன்படி, தமிழகத்தில் அறிகுறிகள் உள்ளோருக்கு ஆர்டிபிசிஆர் பரிசோதனை நடத்துமாறு பொது சுகாதாரத் துறை இயக்குநர் செல்வவிநாயகம் உத்தரவிட்டார். அதன்படி, தினமும் 350 க்கும் மேற்பட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தமிழகத்தில் யாருக்கு எல்லாம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்த அறிவுறுத்தலை சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு செல்வவிநாயகம் வழங்கியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில்,

"காய்ச்சல், சளி, தொண்டை வலி, மூச்சுத் திணறல் உள்ளிட்ட கரோனா அறிகுறிகள் உள்ள அனைவருக்கும் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், இணை நோயாளிகள், உறுப்பு மாற்று சிகிச்சை மேற்கொண்டவர்களுக்கு கரோனாபரிசோதனை கட்டாயம் மேற்கொள்ள வேண்டும்.

தொற்றுஉறுதி செய்யப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கும் பரிசோதனை செய்ய வேண்டும். மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் தீவிர நுரையீரல் தொற்றுக்குள்ளானவர்கள், இன்ஃப்ளுயன்சா போன்ற பாதிப்புக்குள்ளானவர்களுக்கும் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

## ஆளுநர் ரவி முதலமைச்சர் ஸ்டாலின் சந்தித்திருக் கிறார்களே?

உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையின்படி இருவரும் சந்தித்திருக்கிறார்கள் .அதனால் தமிழ்நாட்டுக்கு நன்மை கிடைக்குமானால் அது வரவேற்கத்தக்கதாகும். ஆளுநரை சந்தித்து விட்டு வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின்"அரசியல் சாசன விதிகளுக்குட்பட்டு ஆளுநர் செயல்பட வேண்டும். அப்போது தான் மாநில மக்களின் நலனுக்கும் நிர்வாகத்திற்கும் பயனளிக்ககூடிய வகையில் செயல்பாடு அமையும்.

உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்துகளை ஆளுநர் மனதில்கொண்டு நிலுவையில் உள்ள மசோதக்களுக்கு ஒப்புதல் வழங்குவதோடு வருங்காலங்களில் இதுபோன்ற தாமதங்களை ஆளுநர் தவிர்த்திட வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்." என்று முதல்வர் பதிவிட்டுள்ளார்.

"தமிழக முதலமைச்சருடனான சந்திப்பு சுமுகமாக இருந்ததாகவும், மாநில அரசுக்கு உறுதுணையாக இருப்பதாகவும் ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில், "மாநிலம் சார்ந்த பல்வேறு விஷயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. தமிழக மக்களுக்காக எனது முழு அர்ப்பணிப்பை இந்த சந்திப்பில் வலியுறுத்தியுள்ளேன்.மேலும் அரசியல் சாசனத்துக்கு உட்பட்டு மாநில அரசுக்கு ஆதரவு அளிக்கப்படும்" என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது." நல்லதே நடக்க வேண்டும் என்று நம்புகிறோம்

## நடிகர் விஜய் நிகழ்ச்சிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கி உள்ளாரே?

சமீபகாலமாக திரைப்பட விழாக்களின் விஜய் அவர்கள் பேசும் பேச்சு நடிகர் விஜய் அவர்கள் அரசியலுக்கு வருவதற்கான அடித்தளத்தை அமைத்து வருகிறார் என்ற செய்தியில் உண்மை இல்லாமல் இல்லை. குறிப்பாக ரஜினிகாந்த் அரசியலில் வருவேன் வருவேன் என்று சொல்லி இனி வரமாட்டார் என்ற சூழலில் விஜய் அவர்கள் தற்போது அரசியலுக்கு வர அடித்தளம் அமைத்து வருகிறார் என்றே சொல்லலாம். ஏற்கனவே பத்தாம் வகுப்பு 12ஆம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ



மாணவியர்களை அழைத்து அவர்களுக்கு உதவித்தொகை வழங்கினார். சமீபத்தில் தென் மாவட்டங்களில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புக்கு ஆளான மக்களை வரவழைத்து அவர்களுக்கு உதவிகளை வழங்கினார்.

## சபரிமலை செல்வோர் எண்ணிக்கை கூடியிருக்கிறதே?

சபரிமலை ஐயப்பன் கோவிலில் நடப்பு மண்டல பூஜை காலத்தில் முதல் முறையாக நேற்று ஒரே நாளில் 1,00,969 பேர் தரிசனம் செய்தனர். சபரிமலையில் பக்தர்கள் சுமார் 15 மணிநேரம் காத்திருந்து பதினெட்டு படிகளேறி ஐயப்பனை தரிசனம் செய்தனர்.

டிசம்பர் 6ம் தேதிக்கு பிறகு பக்தர்கள் கூட்டம் அதிகரித்தது. பக்தர்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் பாதுகாப்பு படையினர் திணறினர். தலையில் இருமுடியோடு 22 மணி நேரத்திற்கு மேல் வரிசையில் காத்திருந்தும் சாமி தரிசனம் செய்ய முடியாததால், திரும்பி சென்றனர். கூட்டம் அதிகமாக இருந்ததால் சபரிமலை ஐயப்பனை தரிசனம் செய்யாமல் பக்தர்கள் பந்தளத்தில் இருந்து திரும்பி வருவதாக செய்திகள் வெளியாகின.

விரதம் இருந்து யாத்திரை சென்ற ஐயப்பபக்தர்கள் நெய் அபிஷேகம் செய்து, விலையுயர்ந்த மாலையை கோவிலில் இருந்து அகற்றிவிட்டு, பந்தளத்தில் இருந்தே தரிசனம் பெறாமல் மணிக்கணக்கில் காத்திருந்துவிட்டு திரும்பிசென்றனர். கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த மண்டல பூஜை தினத்தன்று 70ஆயிரம் பக்தர்களுக்கு மட்டுமே ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று தேவசம்போர்டு நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# திரையா? சிறையா?

**தூ**க்க மாத்திரை பல போட்டும் தூக்கமில்லை என அமெரிக்க மருத்துவரைப் பார்க்கப் போகையில் நகருந்திலிருந்து வெளியே ஓடிய பார்வையில்...

அண்ணா சாலை குறுக்கே கம்பித்தடுப்பின் அரைச்சாண் அகலத்தில் தூங்கிக்கொண்டிருந்தான் பாட்டாளி, இரவு வண்டிகளில் மூட்டை இறக்கிய களைப்பில்!

பசியால் சிலர் தூங்காமல், பசிக்கவில்லையே எனச் சிலர் தூங்காமல்! தூக்கம் இல்லாமல் பலர், தூங்கிக்கொண்டே பலர்..

தூங்காதே தம்பி தூங்காதே" என்ற பாட்டுக் கோட்டை "பள்ளியில் தூங்கியவன் கல்வி இழந்தான்" என்றார். தமிழய்யா சொன்னார். பள்ளி என்பது தூங்குமிடம். ஆம், சமணத் துறவியர் தூங்கும் குகைகள். ஆனால் அங்கேதான் தமிழ் கற்பித்தார்கள்; மாணவர்கள் கற்றார்கள்.

"இரவில் வாங்கினோம், இன்னும் விடியவில்லை!" என்பது பச்சையப்பன் கல்லூரி மாணவன் பாடிய புதுக்கவிதை.

"பகலில் வாங்கியிருந்தால் மட்டும் என்ன கிழித்து விடப் போகிறீர்கள்" என்று எதிர்க்கவிதையும் பாடினான் ஓர்புதுக்கவிஞன். ஆம், தூங்குமூஞ்சி மரமும் பகலில் விழிக்கும். தமிழன் விழிப்பானா?

சுற்றிலும் தீப்பற்றி எரியும்போது, நடுவில் யாராவது தூங்குவானா?

"என்னருந்தமிழர் இன்னலிலே துயின்றிருந்தார்" என்று பாடினார் பாவேந்தர். "நள்ளென் றன்றே யாமம்; சொல் அவிந்து, இனிது அடங்கினரே மாக்கள்; முனிவு இன்று, நனந்தலை உலகமும் துஞ்சும்; ஓர்யான் மன்ற துஞ்சாதேனே" 6, குறுந்தொகை, 6, நெய்தல் பதுமனார் பாடியது .

"ஊர் உறங்குது, உலகும் உறங்குது, நானுறங்கவில்லை" என்ற திரைப்பாட்டு பிரிவிடை இரங்கல். "நேத்து ராத்திரி யம்மா அக்கம் போச்சுடி யம்மா" என்ற பாட்டுத்திரை கண்விதுப்பழிதல். தங்களுக்குக் குமாஸ்தாக்கள் (எழுத்தர்கள்) வேண்டுமென்று அன்றைக்கு அயல்நாட்டார் நம்மை ஆங்கிலம் படிக்க வைத்தனர்.

இன்று அயல்நாடு விழித்திருக்கும் நேரத்தில் அவர்களுக்கு கணினி எழுத்தர்களாய் இராக் கோழிகளாய் நம் இளையர். போதாக்குறைக்கு பெரிய திரை, சின்னத்திரை யாவற்றையும் மிஞ்சி கைத்திரை (கைப்பேசி) எனும் கைவிலங்கு இரவைப் பகலாக்குகிறது, பகலை இருட்டாக்குகிறது!

**– தஞ்சை இறையரசன்**

# இருப்பதை வெளிப்படுத்தும் வாட்ஸ் அப் காலை வணக்கம்!

தினமும் ஒரு இளைஞன், அதிகாலை வேலையில் தினசரி பேப்பர் போடும் போது ஒரு வீட்டில் அதற்காக ஒரு போஸ்ட் பாக்ஸ் போல ஒரு பெட்டி காம்பவுண்ட் கேட்டில் இருக்கும்.

பேப்பர் போடும் பையனும் தினமும் அதிலேயே பேப்பர் போட்டுக் கொண்டு வந்திருந்தான்.

திடீரென ஒரு நாள் அந்த பெட்டியை காணவில்லை. காலிங் பெல்லை அழுத்தி பார்த்த போது ஒரு வயோதிகர். வயதோ எண்பது வயதிருக்கும். மெதுவாக பெரியவர் வந்து கதவை திறந்தார்.

இளைஞனும் அவரிடம், வாசலில் இருந்த பாக்ஸ் எங்கே ஐயா என்று கேட்டான்.

பெரியவரோ ! தம்பி நான் தான் அந்த பெட்டியை நேற்று எடுத்துவிட்டேன்.

நீ தினமும் என்னை அழைத்து பேப்பர் கையிலேயே கொடுத்து விடு என்றார்.

இளைஞனோ! ஐயா அது உங்களுக்கும் நேரம் எடுத்து கொள்ளும், எனக்கும் நேரம் அதிகம் செலவாகும், காலையிலே பல இடங்களுக்கு சென்று பேப்பர் போடுவதால் அதில் எனக்கு நேரம் கூடுதலாக செலவாகும். ஆகவே நீங்கள் மறுபடியும் அந்த பெட்டியை இருந்த இடத்திலேயே வைத்தால் நன்றாக இருக்கும் என்றான்.

பெரியவரோ ! தம்பி ! பரவாயில்லை !

நீ என்னை அழைத்து கையில் பேப்பர் கொடுத்து விட்டு போ வேண்டுமென்றால் நான் கூடுதலாக 500 ரூபாய் ஒவ்வொரு மாதமும் அதிகம் தருகின்றேன் என்றார்.

இளைஞனுக்கு ஒன்றும் புரியவில்லை ! அவரிடமே காரணத்தை கேட்டான்.

அதற்கு பெரியவர்,தம்பி சமீபத்தில் என்னுடைய மனைவி காலமாகி விட்டாள்.

நான் தனியாவே இருக்கின்றேன். எனது பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டில் இருக்கின்றார்கள். என் மனைவி நெடு நாட்களாக மரண படுக்கையில் நோயாகயாகவே இருந்து இறந்து போனாள்.

நான் வளர்த்த பிள்ளைகளெல்லாம் அவள் நோயாக இருந்தபோதே கொஞ்சம் கொஞ்சமாக போனில் பேசுவதை நிறுத்தி விட்டார்கள். என் மனைவியின் மரணத்திற்கு கூட யாரும் வரவில்லை.



நான் கஷ்டப் பட்டு வளர்த்த பிள்ளைகளுக்கும் நான் பாரமாகி விட்டேன்.

நீயாவது தினமும் வந்து என்னை அழைத்து பேப்பர் தந்தால் நான் இன்னமும் உயிரோடு தான் இருக்கின்றேன் என்று அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கும் புரியும்.

ஆரம்ப காலங்களில் என் சந்தோஷம், என் தனிமை, என் குடும்பம் என சுயநலமாகவே சிந்தித்து அக்கம் பக்கத்தினர் வலிய வந்து அவர்களாகவே அன்பாக பேசிய போதெல்லாம் ஏதாவது உதவி கேட்பார்கள் என நானாகவே நினைத்துக் கொண்டு, ஒரு கட்டத்தில் அதை தொந்தரவாக நினைத்தும் காம்பவுண்ட் கேட் என போட்டு அவர்கள் வருவதை முற்றிலும் தடுத்து விட்டேன்.

யாரெல்லாம் எனது நெருங்கிய சொந்த உறவுகள் என நினைத்தேனோ அவர்கள் எல்லாருமே துக்கம் விசாரித்ததோடு கடமைக்கு என வந்து போனார்கள்.

ஆனால் யாரெல்லாம் வரவேக்கூடாது என நினைத்தேனோ அந்த அக்கம் பக்கத்தினர் தான் என் மனைவியின் இறுதி சடங்கில் இறுதி அடக்கம் வரையில் எந்த பலனும் எதிர்பாராமல் இருந்து உதவினர்.

இப்போது நானும் வயோதிகர் என்பதால் பக்கத்து

வீட்டில் உள்ளவர்கள் கூட என்னோடு பாசத்தோடு ஸ்னேகம் கூடிய வார்த்தைகளோ என்னிடம் பங்கு வைப்பதில்லை.

காரணம், பணம் அந்தஸ்து உயர்ந்த நிலையில்,வலிய வந்து அன்பாக உறவு கொண்டாடிய அந்த நல்ல உள்ளங்களை மதிக்கத் தெரியாமல் தடுத்த பாவியான என்னால் எந்த விதமான நன்மையும் வராது என்றும் தான் அவர்களும் என்னை தொடர்பு கொள்வதில்லை...

ஒரு வேளை நீ பேப்பர் போட தினமும் என்னை அழைக்கும்போது, நான் வரவில்லை என்றால் நான் அன்று இறந்து விட்டேன் என தீர்மானித்து விடு!

உடனே அக்கம் பக்கம் மற்றும் போலீஸை அழைத்து சொல்லி விடு!

அப்புறம் தம்பி என்னுடைய பிள்ளைகளின் வாட்சப் நம்பரும் தருகிறேன்!

ஒரு வேளை நான் இறக்கும் போது தயவு செய்து என் பிள்ளைகளுக்கு வாய்ஸ் ரெக்கார்ட் மூலம் நான் மரணத்திததை சொல்லி விடு.

இதையெல்லாம் கேட்ட அந்த இளைஞனுக்கு கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வந்தது. சொல்லிக் கொண்டிருந்த பெரியவருக்கும் குரல் தழுதழுத்தது.

இன்றைய நவீன உலகில் தனித்தீவாக உள்ள வீடுகளிலும் ஒவ்வொரு அப்பார்மெண்டிலும் இந்த மாதிரி முதியோர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

சில முதியோர்கள் வாட்சப்பில் தினமும் குட்மார்ணிங் என்றும் வணக்கம் என்றும் அனுப்பும் போதெல்லாம், இந்த பெரிசுக்கு வேற வேலையில்லை, இது ஒரு தொல்லை தான் என்று நினைத்து பலரை நானே பிளாக் செய்துள்ளேன்.

இப்போது தான் அதன் உள் அர்த்தமே புரிகின்றது.

அவர்களெல்லாம் தனிமையில் வாடுகின்றவர்கள், அன்பிற்காக ஏங்குகின்றவர்கள்.

கேட் வாட்ச் மேன், நான்கு வீடுகள், நான்கு கார்கள் என இருக்கும்.

ஆனாலும் கூட பேச்சுத் துணைக்கு யாருமில்லை !

பேசாமல் தனிமையில் இருந்து, அந்த துக்கத்திலேயே மரணத்தை தழுவியவர்கள் பலர்.

ஒரு வேளை அவர்கள் நமஸ்காரம், குட்மார்ணிங் என்று மேஸேஜ் அனுப்புவதே, தான் உயிரோடு தான் உள்ளேன் என்பதை மற்றவர்களுக்கு உணர்த்த தான் அனுப்புகிறேன் என்றும் இப்போது நினைக்கின்றேன்.

பச்சை இலைகள் ஒன்றை நினைத்து கொள்ள வேண்டும். நாமும் பழுத்த இலைகள் ஆகி மரத்திலிருந்து ஒரு நாள் உதிர்ந்து விடுவோம் என்று.

**– ஆவடி ஜெ.சேகர்**





# திருக்குறளில் ஓர் இமாலய சாதனை



அகழ் கலை இலக்கிய அமைப்பின் சார்பாக, 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், திருக்குறளில் ஒரு உலக சாதனையை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டது.

"ஒரு குறளுக்கு ஒரு கதை என்று, ஒருவர் 10 கதைகள் எழுத வேண்டும், இதற்காக 133 அதிகாரங்களுக்கும் 133 எழுத்தாளர்கள் தேவைப்படுகிறார்கள்" என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டது. பலரும் ஆர்வமாக வந்து கதைகளை எழுதினார்கள். பல கட்டங்களை இந்தச் செயல்பாடு கடந்து வந்தது. முதலில் இணைய வழியில் 133 எழுத்தாளர்களும் சேர்ந்து, 133 நிமிடங்களில் தாங்கள் உருவாக்கிய ஒரு பக்க கதையை எழுதி, உலக சாதனை செய்தனர். பிறகு, அந்தக் கதைகள் படிக்கப்பட்டு, திருத்தப்பட்டு, 133 புத்தகங்களும் முதல் கட்டமாக பெரம்பலூரில் அறிமுகம் செய்யப்பட்டது. 133 எழுத்தாளர்களும் அந்த நிகழ்ச்சியில் சிறப்பு செய்யப்பட்டனர்.

அதற்குப்பிறகு, மேலும் அந்தக் கதைகளை திருத்துதல், பிழைகளை அகற்றுதல் என்று பணிகள் நடைபெற்று, ஒவ்வொரு எழுத்தாளர்களும் அவர்கள் வாழும் மாவட்டங்களிலேயே அந்தப் புத்தகம் வெளியீடு செய்யப்பட்டு, அந்தக் கதைகள் பற்றிய கருத்துக்கள் பெறப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், அந்தக் கதைகளில் ஆய்வு மேற்கொண்டு, இன்னும் மாற்றங்கள் செய்யப்பட்டது.

இவ்வாறு பல கட்டங்களைத் தாண்டி, இரண்டு வருடமாக இந்தச் செயல்பாடு நடந்து வந்தது. பெரும்பான்மையான எழுத்தாளர்கள் கல்லூரி மாணவர்களாகவும், ஆசிரியர்களாகவும் மூத்தோர்களாகவும் இருந்தனர். ஆனால், திருக்குறளின் அறநெறிகள் பள்ளி வயது மாணவர்களுக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், பள்ளி மாணவ மாணவிகளும் இந்த செயல்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அந்த வகையில், மூன்றாம் வகுப்பு குழந்தைகள் முதல், ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் வரை, இந்த செயல்பாட்டில் இணைந்து தங்களின் அனுபவத்திற்கு ஏற்றார் போல கதைகளை சொன்னார்கள். முதலில் அவர்கள் குறளையும் பொருளையும் படித்து, அதனை மனப்பாடம் செய்து சொன்னார்கள். பிறகு, அந்தப் பொருளுக்கு ஏற்றார் போல் கதைகள் உருவாக்க வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு சொல்லப்பட்டது. அவர்கள் தங்களின் அனுபவத்தின் அடிப்படையில் சிறப்பாக கதைகளை சொன்னார்கள். அவர்கள் சொன்னக் கதைகளை புத்தகத்தில் கொண்டுவந்து, அதை புத்தகமாக்கி அவர்களிடமே கொடுத்த பொழுது, அந்தக் குழந்தைகள் மகிழ்ந்தார்கள். அந்த மகிழ்ச்சியில் பெரும் மகிழ்ச்சியை அடைந்தது அகழ் கலை இலக்கிய குழுமம். மேலும், அந்தக் குழந்தைகளுக்கு என்று தனி ஒரு விழாவையே அகழ் குழுமம் நடத்தியது. அதில், குழந்தைகள் அனைவரும் அழகாக குறள், பொருள், கதை என்று அனைத்தையும் சொல்லி, மக்களின் மனதை வென்றனர்.

இப்படியாக கடந்து வந்த இந்தப் பயணம், தனது இறுதி நிலையை எட்டியது. அப்பொழுது, இதனுடைய இறுதி நிலையும் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற யோசனையின் அடிப்படையில், பிரமாண்ட புத்தகம் ஒன்றைத் தயார் செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அதை எப்படி செய்யலாம் என்று யோசித்த பொழுது, திருக்குறளில் ஏழு சீர் இருப்பதன் அடிப்படையில், ஏழு அடி உயரம் கொண்ட புத்தகத்தை உருவாக்கினால் என்ன? என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆனால் இதனை யாரிடமும் வெளிப்படையாகச் சொல்லவில்லை. பிரம்மாண்ட புத்தகம் என்று மட்டுமே சொல்லி இருந்தோம். பிறகு, அதற்கான வேலைகள் துவங்கியது. ஏழு அடி உயரத்திற்கு கதைகளை கொண்டு வருவது, அதை தட்டச்சு செய்து பதிப்பு செய்வது, மிகவும் சவாலான ஒரு பணியாக இருந்தது.

அதனை மேற்கொண்டு, முதலில் தாளில் பதிப்பு

செய்யப்பட்டது. ஒரு புத்தகம் என்றாலே தாளில் இருக்க வேண்டும் என்ற காரணத்தினால், முதலில் தாளில் அச்சிடப்பட்டது. அது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று, அனைத்து செய்தித்தாள்களிலும் வந்தது. ஊடகங்களிலும் ஒளிபரப்பானது. அதனால், மக்கள் பலரும் வந்து பார்க்கும் போது, அது கொஞ்சம் கிழிந்து கசங்கியது. ஆதலால், நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்க வேண்டும் என்பதனால், மீண்டும் பதாகையில் பதிப்பு செய்யப்பட்டது. நான்கு மூலைகளிலும் மர தட்டிகளை வைத்து, கதவினை திறந்தால் எப்படி ஒவ்வொன்றாக திறக்க முடியுமோ, அதுபோல் 1330 கதைகளும் பதிப்பு செய்யப்பட்ட அந்தப் பதாகைகள், திருப்பி படிக்கும் அளவிற்கு வடிவமைப்பு செய்யப்பட்டு, அதனுடைய அட்டை படங்களும் மரத்தினால் செய்து வடிவமைப்பு செய்யப்பட்டது.

இவ்வாறு இரண்டாவது புத்தகமும் உருவாக்கப்பட்டது. அதனை எப்படி வெளியீடு செய்யலாம் என்று யோசித்த பொழுது, மனதில் ஏனோ தோன்றியது, "ஏன் தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் இதை பொறுத்து கேட்கக் கூடாது?" என்று. அதற்கான முயற்சிகளை எடுத்து பல்கலைக்கழகத்திடம் எங்களுடைய பணிகளை சொல்லி அனுமதி கேட்கும் பொழுது, அவர்கள் தாராளமாக இந்தப் புத்தகத்தை வெளியீடு செய்யலாம் என்று அனுமதி வழங்கினர். பெருந்துணையாக இருந்தனர். அதற்குப் பிறகு அந்த புத்தக வெளியீட்டுக்கான வேலைகள் துவங்கியது. தமிழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வி. திருவள்ளுவன் ஐயா அவர்கள் தலைமை வகிக்க, பதிவாளர் முனைவர் சி. தியாகராஜன் ஐயா அவர்கள், வளர்தமிழ்ப் புல முதன்மையர் குறிஞ்சி வேந்தன் ஐயா அவர்கள் போன்றோர் முன்னிலையில், தமிழ் உலகின் பெரும் ஆசான், பேராசிரியர் சாலமன் பாப்பையா ஐயா அவர்களும், தமிழ் வளர்ச்சி துறை இயக்குனர் முனைவர் நா. அருள் ஐயா அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.




பெரம்பலூரின் அஸ்வின்ஸ் இனிப்பு, கார வகை நிறுவனத்தின் நிறுவனர் கே. ஆர். வி. கணேசன் அவர்களும், ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ், பாண்டிச்சேரி நிறுவனர் மதிப்புறு முனைவர் செ. வெங்கடேசன் அவர்களும் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர்.

இவர்கள் அனைவரும் சேர்ந்து ஏழு அடி புத்தகத்தை வெளியீடு செய்து சிறப்பு செய்தனர். மிகப் பெரும் ஆளுமைகளால் இந்த புத்தகம் தமிழ் பல்கலைக்கழகத்தில் வெளியீடு செய்யப்பட்டு, இப்பொழுது தமிழ் பல்கலைக்கழகத்திலேயே, தாளால் ஆன புத்தகமும், பதாகையால் ஆன புத்தகமும் நிலைப்படுத்தப்பட்டு இருக்கிறது.

133 எழுத்தாளர்களும் அந்த நிகழ்வில் வந்து கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் அந்த நிகழ்வில் சிறப்பு செய்யப்பட்டனர். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வி. திருவள்ளுவன் ஐயா அவர்கள் "திருக்குறளுக்காக 133 எழுத்தாளர்கள் மேற்கொண்ட இந்த செயல், பெரும் பாராட்டுக்குரியது. இந்த அனைத்துக் கதைகளும் ஒலி, ஒளி வடிவமாக மாற்றப்பட்டு, உலகின் பல்வேறு இடங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் கொண்டு சேர்க்கும்" என்று சொல்லி, 133 எழுத்தாளர்களை வாழ்த்தினார்.

மக்களை புரட்டி போட்ட கொரோனா காலம், இப்படிப்பட்ட ஒரு சிறந்த செயல்பாடு தோன்றுவதற்கு பெரும் காரணமாக இருக்கிறது என்று சாலமன் பாப்பையா ஐயா அவர்கள் உரை நிகழ்த்தி 133 எழுத்தாளர்களையும் வாழ்த்தினார்.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் முனைவர் ஔவை நா. அருள் ஐயா அவர்கள், "தமிழ் உலகின் மிகப்பெரும் செயல்பாடு, மிகப்பெரும் சாதனை திருக்குறளுக்கான சிறந்தொரு செயல்பாடு" என்று சொல்லி இந்த செயல்பாடை வாழ்த்தி, 133 எழுத்தாளர்களை வாழ்த்தினார்கள். இதோ இவ்வாறு சிறப்பாக நிறைவடைந்து இருக்கிறது எங்கள் செயல்பாடு. இந்த செயல்பாட்டில் நாங்கள் சந்தித்தது ஏராளம் ஏராளம். அதிகமாக செலவை சந்தித்தோம். அதனை 133 பேரும் பகிர்ந்து உண்மையிலேயே வறுமை நிலையில் இருக்கின்றவர்களிடம் நாங்கள் பணம் பெறவில்லை. அவர்களுக்கு வெளியே உதவிகளை கேட்டு பெற்று முடித்தோம். ஒரு சிலர் மிகப்பெரிய செயல்பாடு இது. நிச்சயம் நடத்துவது மிகவும் கடினம். இது நிச்சயம் நடக்காது என்று சொல்லி விலகி விட்டனர். ஒரு சிலர் சூழல்களால் விலகி விட்டனர். இவ்வாறு உள்ளே வெளியே விளையாட்டு நிறைய நடந்தது. இதில், நாங்கள் சந்தித்த பிரச்சனைகளும் ஏராளம் ஏராளம்.

எத்தனையோ சூழல்களில் இதை கைவிட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தாலும், எந்தச் சூழலிலும் இதைக் கைவிட்டு விடக்கூடாது என்று தாக்குப் பிடித்து, இதோ இப்பொழுது நிலை நிறுத்தி விட்டோம். இந்தச் செயல்பாட்டிற்கு, பல வகைகளிலும் உதவியாகவும் துணையாகவும் இருந்த அனைத்து நல்லுள்ளங்களையும் வணங்கி மகிழ்கிறோம்.

# 1330, குறள்களுக்கு, கதைகள் உருவாக்கிய 133 எழுத்தாளர்கள்



# 1330, குறள்களுக்கு, கதைகள் உருவாக்கிய 133 எழுத்தாளர்கள்



# 1330, குறள்களுக்கு, கதைகள் உருவாக்கிய 133 எழுத்தாளர்கள்



MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/.2022-2024
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2022-2024
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 January 2024

# ஆசிரியர் பங்கேற்ற நிகழ்ச்சி!





இராமநாதபுரம் மாவட்டம், கமுதி பி. முகமது சிராஜுதீன்_ஏ.அஜீஸ்சுன்நிசா இணையரின் அன்பு மகள் எம்,எஸ், அல்பிதா யாஸ்மின் – Z.அப்துல் பாசித் (ஏ.ஜாகிர் உசேன் – Z.ரசிதா பேகம் இணையரின் அன்பு மகன்) வலிமா நிகழ்ச்சி 25.12.2023 திங்கட்கிழமை மாலை சென்னை ராயப்பேட்டையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மித்ரா டைம்ஸ் ஆசிரியரும் மித்ரா குழும நிறுவனங்களின் தலைவருமான திரு எம்.எஸ்.மூர்த்தி அவர்கள் வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் நீதிபதிகள் திரு.ராஜேஸ்வரன், திரு முருகேசன், திரு.ரவிச்சந்திரன் போஸ், காவல்துறை இணை ஆணையர் திரு.சபாபதி, தொழிலதிபர்கள் ராதா எக்ஸ்போர்ட்ஸ் திரு..கிருஷ்ணன், kals Distilleries திரு.கே.கலியபெருமாள் (கே.பி), திரு.பாபு, திரு.ரவி திரு.ரமேஷ் திரு.திருப்பூர் செந்தில், திரு.ஜெய பாண்டியன், திரு.சைலேந்தர், திரு.ஆர்.கே., திரு.உமாபதி, வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் திரு.தேவா, வழக்கறிஞர் திரு.நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY